
ISSN 1391-9504

# விஜய்

Wijey - விஜேயி

04-07-2005 - மலர் 02, இதழ் 08



## கங்காருகளின் வாழ்க்கைமுறை

புதிய தொடர்கதை ஆரம்பம்

விலை ரூபா: 10/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியச் சோலை

கவிச் சித்திரங்கள் 15 தயாரிப்பு: நவசீலன்

# கல்வியும் நற்பண்பும்

கம்பன் உதவியாளர் என்று கூறிக் கொண்டு வந்திருந்த கம்பர் மீது சேர மன்னனின் அரசவையில் இருந்த வித்துவான்களுக்கு நாளுக்கு, நாள் பொறாமை அதிகரித்து வந்தது. வித்துவக் காய்ச்சலால் மூண்ட பகை 'தென்றல் முற்றிச் சூறாவளியானது போல்' உக்கிரம் அடைந்தது. உதவியாளருக்கும், அரசருக்குமிடையே பகைமையை ஏற்படுத்துவதில் அவர்கள் மும்முரமாகச் செயல்பட்டனர். அதற்கான சதித் திட்டத்தையும் தீட்டினார்கள்.

உதவியாளரை இழிகுலத்தவன் என்று அரசரை நம்பவைத்துவிட்டால் அரசருக்கும் உதவியாளருக்கும் இடையில் உள்ள நெருக்கத்தைத் துண்டித்து விடலாம் என அவர்கள் நினைத்தனர். அந்த எண்ணத்தில் அரசருக்குச் சவரம் செய்பவனை இரகசியமாகச் சந்தித்து "நீ அந்த உதவியாளரை உனது உறவினன் என்று அரசரை எப்படியாவது நம்பவைத்து விட வேண்டும். அப்படிச் செய்வாயானால் உனக்கு இரண்டாயிரம் வராகன் தருவோம். இதனால் உனக்கு எவ்வித பிரச்சினையும் வராமல் பார்த்துக் கொள்வோம். மேலும், உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமென்றாலும் தருவோம்." என்று அவனுக்கு நம்பிக்கை உண்டாகச் சொல்லிச் சம்மதிக்கச் செய்து உடன்படிக்கை எழுதிப் பணத்தையும் கையில் கொடுத்தார்கள். பெரும் தொகை பணத்தைக் கண்ட அவன் பேராசை கொண்டு அவர்கள் சொன்ன காரியத்தைச் செய்யத் துணிந்தான்.

அந்தக் காரியத்தைச் செய்வதற்கான சந்தர்ப்பத்தையும் சவரம் செய்பவன் எதிர்பார்த்துக் காத்திருந்தான். அதற்கான சந்தர்ப்பமும் வந்தது.

ஒருநாள் அரசவையில், சேர மன்னன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கையில் அவர் பக்கத்திலிருந்த உதவியாளர் ஏதோ தேவை காரணமாக அங்கிருந்து இறங்கி வாயிலுக்குச் செல்கையில் அங்கே காத்திருந்த சவரம் செய்வன் அனைவருக்கும் முன்பாகக் கட்டிப்பிடித்துக் கொண்டு "அண்ணா இவ்வளவு காலமும் உன் முகத்தைப் பார்க்காமல் இருந்தேன். நீ எங்கே போயிருந்தாய்?" என்று கூறிக் "கோ" வென்று கதறியழுதான்.

உதவியாளர் பெயரில் இருந்த கம்பர் அது கண்டு "இதில் ஏதோ சதி இருக்கிறது" என்று அறிந்து கொண்டு ப்திலுக்கு அவரும் நடித்தார். அவர் கூறினார், "அடடா தம்பி அழாதே. நாம் தான் இப்போது சந்தித்துக் கொண்டோமே. உன் வீடு எங்கே இருக்கிறது? உனக்குத் திருமணம் ஆகி இருக்குமே. எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள்? பார்க்கலாம் வா." என்று கூறிச் சவரம் செய்பவனை அழைத்துக் கொண்டு சபையை விட்டு வெளியேறினார். அரசன் உட்படச் சபையோர் அனைவரும் அந்தக் காட்சியை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

உதவியாளராக இருந்த கம்பர் சவரம் செய்பவனுடன் செல்லும் போதே "தம்பி குழந்தைகள் இருக்கும் இடத்திற்கு நான் வெறும் கையுடன் வரமாட்டேன். பெரியோர், குழந்தைகள், நோயாளர், கோவில், ஆசிரமம் ஆகிய இடங்களுக்கு வெறுங்கையுடன் போகக் கூடாது என்று நம் முன்னோர்கள் கூறி இருக்கின்றனர். ஆதலால் வா. கடைக்குப் போய்ப் பிள்ளைகளுக்கு ஏதாவது தின்பண்டங்கள் வாங்கிக் கொண்டு போவோம்" என்று கூறிக் கடைக்குப் போய்ச் சில தின்பண்டங்களை வாங்கினார்.

சவரம் செய்பவனும், கம்பரும் சிறிது தூரம் நடந்து சென்ற பின் அங்கு ஒரு குடிசை காணப்பட்டது. அந்தக் குடிசைக்கு முன் நின்று கொண்டு சவரம் செய்பவன் "அடியே அம்மைச்சி உன் அத்தான் வந்திருக்கிறார். இங்கு வந்து பார்." என்று கூறித் தன் மனைவியை



அழைத்தான். அவள் வெளியில் வந்து பார்த்துவிட்டு இருவரையும் குடிசைக்குள் அழைத்துப் போய் அவர் அமருவதற்குப் பலகையொன்றை எடுத்துப் போட்டார். அவர் அமர்ந்ததும் அவர் காலில் விழுந்து வணங்கினாள். கம்பர் அவளைத் "தீர்க்க சுமங்கலியா இரு." என்று வாழ்த்தினார். பின்னர் "குழந்தைகள் எங்கே?" என்று கேட்கச் சவரம் செய்பவன் தன் மூன்று பிள்ளைகளையும் அழைத்து "உங்கள் பெரியப்பா அழைக்கிறார் வாருங்கள்." என்று கூறினான். பிள்ளைகள் மூவரும் அவர் எதிரில் வரக் கம்பர் அவர்களை வாரி எடுத்து மார்போடு அணைத்து முகத்துடன் முகம் வைத்து, கண்ணுடன் கண் ஒற்றி அவர்களுக்கு முத்தமழை பொழிந்தார். பின்னர் "என் அருமை மக்களே நான் உங்கள் மழலை வார்த்தைகளைக் கேட்கவும் உங்களைப் பார்க்கவும், உங்களைச் சீராட்டி, பாராட்டி, கொஞ்சவும் இதுவரையில் பாக்கியம் செய்யாமல் போனேன்" என்று கூறிக் கண்ணீர் சொரிந்தார். பின்னர் சவரம் செய்பவனைப் பார்த்து "எனக்குப் பசிக்கிறது" என்று கூறினார். சவரம் செய்பவன் தன் மனைவியை அழைத்துச் சமையல் செய்யச் சொன்னான். உணவு தயாரானதும் "அண்ணா சாப்பிட வா." என்று அழைத்தான்.

கம்பர் ஒரு செப்புப் பாத்திரத்தை வாங்கிக் கிணற்றிலே நீர் மொண்டு, நீராடிவிட்டு வந்து சாப்பிடுவதற்கு அமர்ந்தார். சவரம் செய்பவனின் மனைவி இலை போட்டுச் சாதம் வைக்கவும் "கம்பர் நான் என்ன அந்நியனா? நீங்கள் சாப்பிடும் கிண்ணி எங்கே?" என்று கேட்கச் சவரம் செய்பவனும், அவன் மனைவியும் மகாபாவம் செய்கிறோமே என்று சிறிதும் அஞ்சாமல்

(தொடர்ச்சி 4ஆம் பக்கத்தில்)

# தென்னை மரம்

கற்பக தருவுக்கு இது
இரண்டாமிடம்
அண்ணாந்து பார்க்கும் பொழுது
ஒரு அன்பு வருகிறது

தென்னை மரம் எங்கள் மரம்
உண்மையில் அற்புதங்களின்
பொக்கிஷமே இதுதானே

தண்ணீரை ஊற்றும் பொழுது
எந்த மனிதனாவது
இளநீர் தருவானா?

பச்சைத் தண்ணீரை
ஔஷதமாக்குகின்ற கலை
தென்னைக்கு மட்டும் தானே
தெரிகிறது

வாழும் பொழுது மற்றவர்க்காய்த்
தன்னை அர்ப்பணிக்கத்
தென்னையைப் பார்த்துத்தான்
தெரிந்து கொள்ள வேண்டும்.

தேங்காய் வேண்டுமா?
தென்னையைக் கேளுங்கள்

இளநீர், ஈர்க்கு, ஓலை, எரிக்க
விறகு – வேர்
பாளை, வீட்டுக்குத் தீராந்தி, மரம்
வாழ்வின் வனப்புகளை
அள்ளித்தரும்
இரண்டாவது கற்பகத் தரு
எங்கள் தென்னை மரம்.

இளைய அப்துல்லாஹ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
இல:08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2314714
பெக்ஸ்: 2314968

எல்லாப் பாடசாலைகளிலும் இலக்கிய மன்றங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று கல்வியமைச்சுத் தீர்மானித்திருக்கின்றது. இது தொடர்பான அறிவுறுத்தல்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. அது மாத்திரமின்றி இத்தகைய பாடசாலை இலக்கிய மன்றங்கள் அனைத்தையும் இணைத்து இலக்கிய மன்றச் சம்மேளனம் ஒன்றையும் அமைத்துப் பொது வேலைத்திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்படவிருப்பது வரவேற்கத் தக்கது.

ஏற்கனவே பல பாடசாலைகளில் இலக்கிய மன்றங்கள் இயங்கி வருகின்றன. ஆனால், அவை எல்லாப் பாடசாலைகளிலும் அமைக்கப்பட்டுள்ளனவா? என்றால், இல்லை! அவை அமைக்கப்பட்டிருக்கும் பாடசாலைகளில் கூட அவை எந்த அளவுக்கு வெற்றிகரமாக இயங்குகின்றன என்பது கவலைக்குரியதே. பாடசாலை அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர்கள் இலக்கியம் தொடர்பிலும் மற்றும் மனித அபிவிருத்திக்கு அது எந்த அளவு பங்களிப்புச் செய்கிறது என்பது தொடர்பிலும் உயர் அறிவு பெற்றவர்களாக இருந்தால் மட்டுமே பாடசாலை இலக்கிய மன்றங்களும் சிறப்பாகச் செயற்பட முடியும்.

அண்மைக் காலமாகவே சமூகத்தில் கலை இலக்கியம் தொடர்பில் ஒரு வேண்டாத அபிப்பிராயம் தலை தூக்கி வருகின்றது. பல பெற்றோர் பிள்ளைகளுக்கு இலக்கியம் உதவாது என்று நினைக்கிறார்கள். பாடசாலை விட்ட பின்பும் "படிப்பு, படிப்பு" என்று அலைவதால் அவர்களுக்கு வேறு எதைப் பற்றியும் சிந்திக்க நேரமில்லை. இத்தகைய போக்கால் ஒரு குறுகிய இத்தகைய கொண்ட வரையறுத்த வட்டத்துக்குள் வாழும், சுயநலமிக்க ஒரு சமூகம் உருவாகிக் கொண்டிருக்கின்றது. பரந்த சிந்தையுள்ள, சமூக நலன் கருதிய, நேர்மையான, தர்மங்களை மதிக்கின்ற சமூகம் அருகி வருகின்றது.

கலை இலக்கியங்களே ஒரு மனிதனைப் பண்புள்ள, ஆளுமையுள்ள, படைப்பாற்றல் கொண்ட, பல திறமைகளை உள்ளடக்கியவனாக வளர்க்கும் அடிப்படை மூல வேர்கள். கற்பனை ஆற்றல்கள் வளர்க்கப்படும் போதுதான் மூளை வளர்ச்சியடைகின்றது. மனித மூளையின் பிரகாசமான பகுதிகளைக் கற்பனை வளத்துடன் போசிக்கப்பட வேண்டும். மனிதனுக்குக் கலை இலக்கியங்கள் மறுக்கப்பட்டால் அவனது மூளையின் கரும் பகுதிகளே வளர்ச்சியடைகின்றன.

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்பதும், 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை' என்பதும் நாம் அறிந்த பிரசித்தமான பழமொழிகள். இப்பழமொழிகளில் மாபெரும் மனோதத்துவம் பொதிந்துள்ளதைப் பலர் அறியமாட்டார்கள்! இதையொத்த ஆங்கிலப் பழமொழி ஒன்று உண்டு. மனிதன் எதனை யாவது கற்றுக் கொண்டிருப்பானாயின் அது பாலர் பாடசாலையில் கற்றுக் கொண்டதுதான். ஆதலால் பாடசாலைகளில் இலக்கியம் செய்தல் இன்றியமையாததாகும்.

- ஆசிரியர்

# க.பொ.த (உ/த) வினாத்தாள் திருத்தும் இரண்டாம் கட்டப் பணிகள்



க.பொ.த (உ/த) பரீட்சை வினாத்தாள்களைத் திருத்தும் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பாடசாலைகள் ஜூலை 11 ஆம் திகதியன்று மீண்டும் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் தாள்களைத் திருத்தும் முதற்கட்டப் பணிகள் கடந்த ஜூன் 26 ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை 10 ஆம் திகதி வரை நடைபெறுகின்றன.

எனினும், பரீட்சைத் தாள்களைத் திருத்தும் இரண்டாம் கட்டப் பணிகளுக்குப் பாடசாலைகள் மூடப்பட மாட்டாது எனப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. வினாத்தாள்களைத் திருத்தும் இரண்டாம் கட்டப் பணிகள் ஜூலை 11 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்

வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும் பொருட்டு, அவ்வவ் அமைச்சுக்களில் வெற்றிடங்களுக்கு நிரப்பப்பட்ட பட்டதாரிகளில், சுற்றுப்புறச்சூழல் காப்பு அமைச்சுக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த 25 பட்டதாரிகளுக்குத் தேசிய விலங்கினக் காட்சிச்சாலையில் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இதுவரை விலங்கினக் காட்சிசாலையில் தொழில் பார்த்து வந்தவர்களில் 33 வீதமானோர் ஒப்பந்த அடிப்படையிலேயே வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்களுக்கும் மேற்படி பட்டதாரிகளின் நியமனத்துடன் நிரந்தர நியமனம் வழங்கப்படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# படைப்பாளர்களை ஊக்குவிக்கும் குறுந்திரைப்படப் போட்டி!

பாடசாலை மாணவர்கள் மற்றும் மாணவர் அல்லாதோர் ஆகியோருக்கான தொலைக்காட்சிக் குறுந்திரைப்படப் போட்டியொன்று இலங்கை சுற்றுப்புறச் சூழல் திட்டத்தின் கீழ் நடத்தப்படவுள்ளது. இயற்கைச் சூழல், சமூகம், அபிவிருத்தி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைக் கருப்பொருளாக முன்னிருத்தி இக்குறுந்திரைப்படங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.




மேலும், இவை இதற்கு முன்னர் எந்தவொரு தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகியிருக்கக் கூடாது.

கார்ட்டூன், மப்பட், பொம்மலாட்டம் அல்லது நேரடிக் காட்சிகள் ஆகியவற்றினூடாகப் படைப்பாளர்கள் தமது கதாபாத்திரங்களைச் சிருஷ்டிக்க முடியும்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய எந்தவொரு மொழியிலும் மேற்படி தொலைக்காட்சிக் குறுந்திரைப்படங்களைத் தயாரிக்கலாம். ஆனால் தமிழ், ஆங்கில மொழியிலான படைப்புக்களின் ஆக்கப்பிரதிகள் சிங்கள மொழியிலும் வழங்கப்படல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்தக் குறுந்திரைப்படங்களை VCD, VHF,DVD ஆகியவற்றில் பதிவு செய்து, அனுப்பி வைக்க முடியும்.

பாடசாலை மாணவர்களின் படைப்புக்களில், பாடசாலை அதிபர் உறுதி செய்து கையொப்பம் இடப்படல் வேண்டும். போட்டியாளர்கள் படைப்புக்களைத் தொலைக்காட்சிக் குறுந்திரைப்படம், இல 18/1 பிரதான வீதி, பத்தரமுல்ல. என்ற முகவரிக்கு ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

# 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை

இந்த ஆண்டுக்கான 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைகள் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதியன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு 3 இலட்சத்து 25 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகளில் 1420 ஆசிரியர்களுக்கு அனுமதி!

ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் இரண்டு வருட பயிற்சிகளை வழங்கும் பொருட்டு ஜூலை மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 1420 ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்குவதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இதன்படி கோப்பாய், மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, கொட்டகலை ஆகிய ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகளுக்குத் தமிழ்மொழி ஆசிரியர்கள் 500 பேரும், மகரகமை, உனவட்டுன, பலபிட்டிய, பேராதனை ஆகிய ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகளுக்குச் சிங்கள மொழி ஆசிரியர் 765 பேரும் ஆங்கில மொழி ஆசிரியர்கள் 155 பேரும் அனுமதிக்கப்படவுள்ளனர்.

மேலும், பயிற்சிகளற்ற இன்னும் 2,000 ஆசிரியர்களுக்கு அடுத்த வருடம் இதே போன்று அனுமதி வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2029 ஏப்ரல் 13ஆம் திகதி நடக்கப் போகும் உலகப் பேரழிவு

முன்பெல்லாம் பேரழிவுகள் எதிர்பாராமல் வந்து ஆயிரக் கணக்கானவர்களை அழித்துவிடும். ஆனால், இப்போதெல்லாம் விஞ்ஞான முன்னேற்றம் காரணமாகப் பல்வேறு அழிவுகளை முன்கூட்டியே அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

அத்தகைய அனர்த்தமானது 2029, ஏப்ரல் 13 ஆம் திகதி இடம் பெறப்போவதாக விஞ்ஞானிகள் அறிவித்திருக்கிறார்கள். அன்றைய தினம் 2004 MN4 என்று பெயரிடப்பட்டுள்ள பாரிய விண்கல்லொன்று பூமியுடன் மோதிப் பேரழிவை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முடைய பாரிய விண்கல்லாகும். இதனை முதன் முதல் 2004, ஜுன் மாதம் கண்டு பிடித்திருந்தனர். பொதுவாகச் சிறிய விண்கற்கள் வாயு மண்டலத்தில் நுழைந்தவுடன் உராய்வு காரணமாக அவை தீப்பற்றி எரிந்து சாம்பலாகிவிடும். ஆனால், இத்தகைய பெரிய விண்கல் அதிக சேதமின்றிப் பூமியில் விழும் வாய்ப்பு உள்ளது.

முன்பு பல மில்லியன் வருடங்களுக்கு முன்னர் இவ்விதம் பாரிய விண்கல் பூமியில் விழுந்ததன் விளைவாக டைனோசர் உயிரினங்கள் பூமியிலிருந்து அழிந்தொழிந்து போயின என்ற கோட்பாடு இப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆதலால் மேற்படி

உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்போதும் கூட ஆசிய, ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் இரவு வானத்தில் இந்த விண்கல் பிரயாணிப்பதை உருப்பெருக்கியால் பார்க்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

இது இப்படி இருக்க இந்த, விண்கல் 2035 ஆண்டிலேயே பூமியில் விழும் என்று வேறு சில வெளிநாட்டு ஆய்வாளர்கள் கணிப்பீடு தெரிவித்துள்ளனர். இவர்களின் கருத்துப்படி இவ்விண்கல் பூமிக்கும், சந்திரனுக்கும் இடையில் பிரயாணம் செய்யும் போது



அன்றைய தினம் தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்குப் புதுவருட தினமாகும். இவர்கள் தத்தமது புது வருடக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பர். அன்றைய வானத்தைப் பார்ப்பவர்களுக்கு அங்கு மிக அதிசயமான, பிரகாசமான வெளிச்சத்துடன் ஒரு வால் நட்சத்திரம் மின்னிக் கொண்டிருப்பது தெரியும். அந்த நட்சத்திரம் இன்னும் கொஞ்ச நேரத்தில் பூமியில் வந்து விழுந்து பேரழிவை ஏற்படுத்தப் போகின்றது என்று பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

இச்செய்தியை நாஸா நிறுவனத்தின் விண்வெளி ஆய்வு விஞ்ஞானிகளான பொல் கொட்ஸ், டொன் யேமன் ஆகியோர் உள்ளடங்கிய விஞ்ஞானிகள் குழுவினர் அறிவித்துள்ளனர். ஒரு புறம் இவ்விண்கல் பூமியில் மோதுவதால் பெரும் அனர்த்தம் எற்படுவது தவிர்க்க ம்டியாததாக இருக்குமென்பதுடன் மறுபுறம் இது கடலில் விழுந்தால் பெரும் சுனாமிப் பேரலையையும் தோற்றுவிக்கும் என்று கணித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வந்துள்ளதாவது, இந்த விண்கல் 320 மீற்றர் அகல

2004 MN4 என்ற விண்கல் பூமியுடன் மோதினால் அதன் விளைவு என்னவாக இருக்குமென விஞ்ஞானிகள் இப்போது ஆழ்ந்து சிந்திக்கவாரம்பித்துள்ளனர்.

இந்த விண்கல் தற்போது மணிக்கு 30,000 மைல் வேகத்தில் பூமியை நோக்கி விரைந்து பிரயாணம் செய்து கொண்டிருக்கிறது. இதனுடைய பிரயாண மார்க்கமும் பூமியின் பிரயாண மார்க்கமும் இரண்டு இடங்களில்

> **இவ்விண்கல் பூமியில் மோதுவதால் பெரும் அனர்த்தம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக இருக்குமென்பதுடன் மறுபுறம் இது கடலில் விழுந்தால் பெரும் சுனாமிப் பேரலையையும் ஏற்படுத்துமாம்..**

ஒன்றையொன்று சந்திக்கும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. அத்தகைய சந்தர்ப்பத்தில் இவை ஒன்றுடன் ஒன்று மோதும் சந்தர்ப்பம் ஏற்படும் அல்லது வேகம் குறைந்து பூமி மீது விழுந்துவிடும் வாய்ப்பும்

அவற்றின் ஈர்ப்புச் சக்தியால் கவரப்பட்டு வேகத்தை இழந்து விடுமென்றும், அதனால் இதன் பிரயாணத் திசை 28 பாகையால் மாற்றமடையுமென்றும்; ஆகையால் இவ்விண்கல் 2035 ஆம் ஆண்டே பூமியில் விழுமென்றும் இவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இக்கருத்துக்களை மறுத்துள்ள நாஸா விஞ்ஞானிகள் 2004 MN4 விண்கல் 2029, ஏப்ரல் 13 ஆம் திகதி பூமியில் விழும் என்று ஆதாரத்துடன் தெரிவித்துள்ளனர். இதனைத் தவிர மேற்படி விண்கல் 2013 ஆம் ஆண்டு அல்லது 2021 ஆம் ஆண்டில் பூமியில் விழும் என்று மற்றுமொரு குழுவினரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தற்போது இவ்விண்கல் பூமியில் இருந்து 9 மில்லியன் கிலோ மீற்றர் தூரத்தில் காணப்படுகின்றது. ஆதலால் மனிதர்களின் சாதாரண கண்களுக்கு அவை புலப்படுவதில்லை. எனினும், சக்தி வாய்ந்த ராடார் அலைகளைப் பயன்படுத்தி இவ்விண்கல்லின் இயக்கச் செயற்பாடுகளை அறிந்து கொள்ளமுடியும். என்று விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

-ஆரெஸ்ஜீ

## கல்வியும் நற்பண்பும்..... (இலக்கியச் சோலைத் தொடர்ச்சி)

கம்பர் சவரம் செய்பவனைப் பார்த்துத் "தம்பி உன்னிடம் ஒரு விஷயம் பேச வேண்டியிருக்கிறது." என்று கூற அவன் "சாப்பிட்டு விட்டுப் பேசலாம் அண்ணா." என்று கூறினான். கம்பர் அதற்கு "இல்லைத் தம்பி, அப்படிச் செய்தால் உன் சோற்றை உண்டு விட்டு உனக்குத் துரோகம் செய்ததாக முடியும். ஆதலால் இரண்டொரு பேச்சு முன்னதாகவே பேசி விட்டு உண்பது நல்லது" என்று கூறனார்.

அவன் "அது என்ன?" என்று கேட்கத் "தம்பி நாம் ஒருவரை ஒருவர் பிரிந்த பின்னர் நீ தெய்வத்தின் அருளால் இந்த அரசரை அண்டிச் சுகமாக வாழ்கிறாய். நானோ கொழுகொம்பு இல்லாத கொடி போல அலைந்து திரிந்தேன். போகட்டும் இதுவரை நீ சம்பாதித்தது என்ன? தெய்வ சாட்சியாக உண்மையைச் சொல்" என்று கூறினார்.

அதற்கு அவன் "சத்தியமாக நான்காயிரம் வராகன் இருக்கும்" என்றான். அவர் அதற்கு "நல்லது தம்பி, அதில் எனக்குப் பாதி சேர வேண்டி இருக்கிறது. அதைக் கொண்டு வந்து வை." என்றார். அவன் வித்துவான்கள் கொடுத்த இரண்டாயிரம் வராகனையும் எடுத்து வந்து வைத்தான்.

கம்பர் அவனிடம் "தம்பி இருபது வருட காலமாக உன் முறைக்கு நீ அரசருக்கு ஊழியம் செய்து வந்தது போல நானும் இருபது வருட காலம் அந்தத் தொழில் செய்ய வேண்டுமே. அதற்கு என்ன சொல்கிறாய்" என்று கேட்டார். அவன் "இதில் என்ன தடை இருக்கிறது. உன் விருப்பப்படி செய்யலாம்?" என்று கூறினார்.

கம்பர் அதற்கு "தம்பி நீ சம்மதித்துவிட்டாய். என்னிடம் சவரம் செய்து கொள்ள அரசர் சம்மதிப்பாரோ? மாட்டாரோ? தெரியவில்லை. அரசரையே கேட்டு அறியலாம் வா." என்று கூறி அவனை அழைத்துக் கொண்டு அரசவைக்குச் சென்றார்.

சவரம் செய்பவனும் கம்பரின் உதவியாளர் என்று கூறிக் கொண்டவரும், அண்ணன், தம்பி என்று நினைத்துச் சபையில் இருந்த ஏனையவர்கள் "அரசர் இதற்கு என்ன பிராயச்சித்தம் செய்யப்போகிறாரோ?" என்று சிந்தித்தனர். அரசரும், அவ்வாறே நினைத்து மனவேதனையடைந்தார். எனினும், நுண்ணறிவு மிக்க அரசர் "இந்த உதவியாளன் இழி குலத்தவன் என்றால் இவனைக் கம்பர் தமக்கு உதவியாளனாக வைத்துக் கொள்வாரா?" என்று சிந்தித்தான். 'இது பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும்' என்றும் நினைத்துக் கொண்டார். அதற்காக வேவுகாரரை அனுப்பி உண்மையைத் தெரிந்து வரச் சொன்னார்.

வேவுகாரரும், சவரம் செய்பவனின் வீட்டில் நடந்தவற்றை வேவு பார்த்துவிட்டு வந்து, அவற்றை அப்படியே கூறி உதவியாளர் தங்களுக்குச் சவரம் செய்யவும் வருகிறார் என்றும் தெரிவித்தனர். அது கேட்டு அரசன் உதவியாளர் உண்மையிலேயே இழி குலத்தவன் தான் என்று நினைத்து மனம் மிக வருந்தினார். அதே வேளை உதவியாளரும் சவரம் செய்பவரும் அங்கே வந்து நின்று அரசனை வணங்கினார்கள்.

(மிகுதி அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளித் தகவல்கள்

அபிலாஷ்

## ஆம்ஸ்ட்ரோங் பற்றிய சந்தேகம்!

**சந்திரனில் காலடி பதித்த முதல் மனிதன் நீல் ஆம்ஸ்ட்ரோங் என்பது உலகறிந்த விடயம். இருப்பினும் நிலவில் இவர் காலடி வைத்தார் என்பது சந்தேகத்திற்குரியதாக இருப்பதாகச் சில மாணவர்கள் நமக்குக் கடிதமொன்றை எழுதியிருந்தனர். இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த சந்தேகங்களில் ஒன்று நீல் ஆம்ஸ்ட்ரோங் இப்பொழுதும் உயிருடன் இருக்கின்றாரென்றால் அவரை ஏன் அமெரிக்கா வெளிக்காட்டாமல் மறைத்து வைத்துள்ளதென்பதாகும். இவர்களது இந்தச் சந்தேகத்தைத் தீர்க்குமாப் போல் சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது. அச்சம்பவம் வருமாறு:**



நீல் ஆம்ஸ்ட்ரோங்கின் தற்போதைய தோற்றம்

உண்மையில் நீல் ஆம்ஸ்ட்ரோங் வழக்கம் போல் தனது தலைமுடியை வெட்டுவதற்காகச் சலூனுக்குச் சென்று வந்துள்ளார். சில தினங்களின் பின்னர் அந்தச் சலூன்




கடைக்காரர் நீல் ஆம்ஸ்ட்ரோங்கின் வெட்டிய தலைமுடியைப் பெருமளவு பணத்திற்கு விலைபேசி விற்றுவிட்டார் என்பதை நீல் ஆம்ஸ்ட்ரோங் தெரிந்து கொண்டார். பிரபலங்களின் தலைமுடியைச் சேகரிப்பதைப் பொழுது போக்காகக் கொண்ட ஒருவருக்கே இவர் இவ்வாறு தலைமுடியை விலைக்கு விற்றுள்ளார்.

பிரபலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட 'ஒஹாயோ' என்ற சட்டத்தின் படி இவ்வாறு நீல் ஆம்ஸ்ட்ரோங் தலைமுடியை விலைபேசி விற்றமை ஒரு பாரிய குற்றமாகும். எனவே இச்சட்டத்தின் கீழ் இந்தச் சலூன்காரருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு நீல் ஆம்ஸ்ட்ரோங் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றாராம்!

இந்தத் தகவலின் அடிப்படையில் பார்க்கையில் நீல் ஆம்ஸ்ட்ரோங் இப்போதும் உயிருடன் இருப்பது உறுதியாகின்றது. (அவரது தற்போதைய படமும் இங்கு பிரசுரமாகியுள்ளது) எனினும், இப்படியொரு சம்பவம் உண்மையிலேயே நடந்ததா? இல்லையா? என்பது குறித்தும் இன்னொரு தரப்பினர் கேள்வி எழுப்பியும் வருகின்றனர்.

## வளையத்திலுள்ள நிறங்கள்

'சனி'க் கோளினைச் சுற்றி வரக் காணப்படுகின்ற வளையத்தையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். சனிக் கோளுக்கு அனுப்பப்பட்ட 'கெஸினி' விண்கலம் எடுத்தனுப்பிய புகைப்படமே இது. இதன்படி சனிக் கோளைச் சுற்றி வரயிருக்கும் வளையமானது சாம்பல், இளஞ்சிவப்பு, இள மண்நிறம் ஆகிய நிறங்களைக் கொண்டு அமைந்திருப்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமன்றிச் சனிக்கோளைச் சுற்றி வரவுள்ள வளையமானது அதிகளவில் பனியினைக் கொண்டிருந்ததாகவும், அதனால் அதில் காணப்படும் வெள்ளை நிறமானது சுத்தமான



வெண்ணிறம் எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். 16,000 மைல் சுற்று வளையத்தைக் கொண்ட "B" எனப்படும் வளையமே மிகக்கூடிய பிரகாசத்தையுடைய வளையமாகவும் கருதப்படுகிறது.

## அமெரிக்காவிற்குப் போட்டியாகக் களமிறங்கும் ஐரோப்பாவின் 'கலீலியோ' செய்மதி

ஐரோப்பிய ஒன்றியத்தின் விண்வெளி ஆராய்ச்சி மையமான 'ஈஸா' ஆராய்ச்சி நிறுவனம் செய்மதியொன்றைத் தயாரிக்கும் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது. இந்தச் செய்மதியானது இதுவரை விண்வெளிக்கு அனுப்பப்பட்ட செய்மதிகளிலேயே அதிகூடிய தொழில்நுட்பத்தைக் கொண்ட செய்மதியாக இருக்கும் எனவும் கருதப்படுகின்றது. இந்த முயற்சியானது வெற்றி அளிக்குமானால், அது அமெரிக்காவின் 'குளோபல் பொஷிஷன் இன் சிஸ்டம்' (GPS) என்ற செய்மதிக்குச் சரிசமமான போட்டியாக அமையும் எனக் கருதப்படுகின்றது.

அப்படியாயின் உலகில் எந்தவொரு இடத்திலும் நடக்கக் கூடிய விடயங்களை இந்தச் செய்மதியினூடாகப் படமெடுத்துக் கொள்ள முடியுமாய் அமையும். "கலீலியோ செய்மதி'' என்றே இது அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.




ஆனால் இந்தக் "கலீலியோ" செய்மதியானது அமெரிக்கச் செய்மதியின் "கொப்பி" (பிரதியே) என்று அமெரிக்கா குத்தலாகத் தெரிவித்துள்ளது. இருப்பினும் அமெரிக்காவின் செய்மதியை விட இது முன்னிலையில் இருப்பதாக "ஈஸா" நிறுவனத்தினர் பதிலுக்குத் தெரிவித்துள்ளனர். அது மட்டுமன்றி இது புதிய தலைமுறையின் உன்னதச் சொத்து எனவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

உயரமான மாடிக் கட்டிடங்களைக் கொண்ட நகரங்களைச் செய்மதிப் புகைப்படம் எடுப்பதற்கு, அமெரிக்கரின் "GPS" செய்மதிக்கு முடியாத காரியமாகவே இது வரை இருந்து வந்துள்ளது. இருப்பினும் ஐரோப்பிய ஒன்றியத்தின் "கலீலியோ" செய்மதியானது அப்படியல்ல! எத்தனை உயரமான கட்டிடங்களையும் கொண்ட நகரங்களையும் புகைப்படம் எடுக்கக் கூடிய வல்லமையை அது கொண்டிருப்பதே அதன் சிறப்பம்சமாகும்.

பூமியை மிகத் தெளிவாகப் படம் பிடித்து, அதனைச் சரிவரத் திருத்தம் பார்த்து, மீண்டும் அந்தப் படங்களைப் பூமிக்கு அனுப்புவதற்கு இந்தச் செய்மதிக்குக் குறுகிய நேரமே தேவைப்படும்.

குறிப்பாக இந்தக் "கலீலியோ" செய்மதியானது 30 செய்மதிகளின் இணையமாகவே செயற்படும்.

அதாவது இந்த 30 செய்மதிகளும் வலைப்பின்னல் அமைப்பில் இணைக்கப்பட்டே தொழிற்படவுள்ளன. பூமியில், 1 மீற்றர் உயரத்திலிருந்து விண்வெளி வரையிலுமுள்ள அனைத்து விடயங்களையும் "கலீலியோ" செய்மதியினால் புகைப்படம் பிடிக்க முடியும்.

இன்னும் இரண்டரை வருடங்களுக்குள் "கலீலியோ" செய்மதியானது விண்ணில் செலுத்தப்படவுள்ளது. இதன் மூலம் ஏனைய நாடுகளும் மிகக் குறைந்த செலவில் செய்மதித் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு வழி பிறக்கும். இலங்கை போன்ற வறிய நாடுகளுக்கு இது நல்லதோர் தகவலாக அமையும்.

'கலீலியோ' அமைக்கப் பட்டுள்ள வலையமைப்பு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் மனிதன் முதன் முதலில் வேட்டையாடியே வாழ்ந்து வந்தான். பின்பு படிப்படியாக முன்னேறி நாகரிகமடையத் தொடங்கினான். அவன் நாகரிகமடையப் பல இலட்சக்கணக்கான ஆண்டுகள் பிடித்தன. இக்காலப் பகுதியை நாம் 'நாகரிக யுகம்' என்று அழைப்போம். உலகின் பல பகுதிகளில் வாழ்ந்த மனிதன் நதிக்கரைகளிலே குடியேறி நாகரிகத்தைத் தோற்றுவித்தான். பின்னர் அவன் பொருளாதாரம், கலாசாரம், அரசியல் போன்ற துறைகளில் நாகரிகமடையத் தொடங்கினான். குவாங்கோ நதிக்கரை, இந்து நதிக்கரை, மெஸப்பத்தேமியா போன்ற நாகரிகங்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கவை. இவை நதிக்கரை நாகரிகங்கள் என்று போற்றப்படுகின்றன. இன்று நாம் மெஸப்பத்தேமியா நாகரிகத்தைப் பற்றிய விளக்கத்தை உங்களுக்குத் தருகின்றோம்.



# நதிக்கரை நாகரிகம்



ஆக்காட் காகொன் அரசனின் தலை. பித்தளைச் சிலை.



மரப்பலகையால் செய்யப்பட்ட இசைக்கருவி. 'ஊர்' அரசாட்சி காலத்தில் இசைக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் வெளிப்படுத்தப்பட்டது.



பிரபுக்கள் அணிந்த உயர் ரக தங்க ஆபரணங்கள்.




மதத் தலைவர்களாலும், வர்த்தகர்களாலும் பயன்படுத்தப்பட்ட அதிகார இலச்சினை. (முத்திரை)



போருக்குப் பயன்படுத்தப் பட்ட குதிரை இரதங்கள்.

யூப்பிரடிஸ்,. தைக்கிறீஸ் ஆகிய இரு நதிகளுக்கிடையில் உருவாகிய நாகரிகமே மெஸப்பத்தேமியா நாகரிகமாகும். இந்நாகரிகம் இரு நதிகளுக்கிடையில் உருவாகியதால் இதனை மெஸப்பத்தேமியா என்றழைத்தனர். மெஸப்பத்தேமியா என்பது "இரண்டு நகர்களுக்கிடையில்" என்று அர்த்தமாகும். இன்று இந்நாகரிகம் உருவாகிய பிரதேசம் ஈராக் என்று அழைக்கப்படுகின்றது. உலகின் மிகப் பழைய நாகரிகமான மெஸப்பத்தேமியாப் பிரதேசத்தில் நகர்கள் கட்டியெழுப்பப்பட்டன. யூப்பிரடீஸ், தைக்கிறீஸ் நதிகளுக்கிடையில் மெஸப்பத்தேமியாவிற்குரிய பிரதேசம் காணப்பட்டமையால் மிகச் செழிப்பான பகுதியாகக் காணப்பட்டது.

மெஸப்பத்தேமியாவில் வாழ்ந்த விவசாயிகள் எழுத்தாற்றலை வளர்த்துச் சென்றதுடன் எழுத்துக் கலை வளர்ச்சிக்காகப் பெரும் சேவையைச் செய்துள்ளதாகத் தொல்பொருள் ஆய்வாளர்கள் மற்றும் இந்நாகரிகத்தைப் பற்றி ஆராயும் பல ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இவர்களால் மிகப் பெரிய நகரங்கள் உருவாக்கப்பட்டதாகவும் பின்பு பேரரசுகள் உருவாக்கப்பட்டு மெஸப்பத்தேமியாவைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் பல இவற்றின் பரிபாலனத்தின் கீழ் வந்ததாகவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.




## விவசாயிகள்

வடக்கிலிருந்து மேற்கு நோக்கிப் பரம்பியிருந்த மலைப்பிரதேசங்களில் காணப்பட்ட விவசாய முறை, படிப்படியாக மெஸப்பத்தேமியாவிற்கும் பரவத் தொடங்கியது. கி.மு 6000 ஆண்டளவில் வாழ்ந்த மனிதர் நதிக்கரைகளில் வாழ்ந்தமையால் கமத்தொழிலுக்காக நீர்பாசனக் கால்வாய்களை வெட்டி அமைத்து நீரைப் பெற்றுக் கொள்ளும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர். அவர்கள் பார்லி, சோளம், ஈச்சை மற்றும் போஞ்சி என்பவற்றைப் பயிரிட்டனர். அதேபோல் ஆடுகள், செம்மறியாடுகள் போன்ற விலங்குகளை வளர்த்ததுடன் அவற்றிலிருந்து இறைச்சி மற்றும் தோல் என்பவையும் பெற்றுக் கொள்ளப்பட்டன. இப்பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகள் சிறப்பாகச் செய்யப்பட்டமையால் மிகச் செழிப்பான பிரதேசங்களாக அமைந்தன. இதன் காரணமாகச் சனத்தொகை வெகு சீக்கிரமாக அதிகரிக்கத் தொடங்கியது. கி.மு 3500 ஆம் ஆண்டளவில் மெஸப்பத்தேமியாவில் அதிகளவிலான மிகப்பெரிய நகரக் குடியிருப்புகள் உருவாகின. இவ்வகையான குடியிருப்புகளில் சனத்தொகையானது 10000 ஆகக் காணப்பட்டது.

## நகர இராச்சியம்

மெஸப்பத்தேமியா நகரில் இருந்த கட்டிடங்கள் அனைத்தும் களிமண் மற்றும் செங்கற்களினால் அமைக்கப்பட்டிருந்ததோடு, சில கட்டிடங்கள் சுட்ட செங்கற்களினால் அமைக்கப்பட்டிருந்தன. இங்கு வாழ்ந்த மக்கள் பின்னல் வேலைகளிலும் துணி நெசவு செய்வதிலும் தமது திறமையைக் காட்டி வந்தனர். அதேபோல் உயர்தரச் செம்பினாலான உபகரணங்களை உற்பத்தி செய்ததுடன் அவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட களிமண் மட்பாண்டங்கள் மிக உயர்தரத்தில் இருந்ததாகத் தொல்பொருள் ஆய்வாளர்களினால் கண்டறியப்பட்டுள்ளன. இங்கிருந்த சகல நகர இராச்சியங்களும் அநேகமாகச் சுதந்திரமான இராச்சியங்களாக அமைந்ததுடன், இங்கு வாழ்ந்த மக்கள் வியாபாரத்தையே தொழிலாகக் கொண்டிருந்தனர். அதேபோல் அவர்கள் யானைத் தந்தம் மற்றும் இரத்தினக் கற்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ததாக நம்பப்படுகின்றது.

## யுத்தத்திற்கு விருப்பமான "கில்கமேஷ்"

சன நடவடிக்கைகளை ஏற்படுத்தல் மற்றும் சக்தி வாய்ந்த மத்திய [illegible]சொன்றைக் கட்டியெழுப்புதல் எ[illegible]வற்றையே மெஸப்பத்தேமியாவை ஆட்சி செய்த அரசர்கள் மற்றும் மதகுருமார்களிடமிருந்து மக்கள் எதிர்பார்த்தனர். இங்கு 'சமர்' என்றழைக்கப்பட்ட 'எறிந்து', 'கிவு' மற்றும் 'உருக்' போன்ற நகர அரசுகளால் மற்ற நகரங்கள் நிர்வகிக்கப்பட்டன. அரச நிர்வாகத்தைத் திறம்படத் தொடர்ந்து செய்வதற்காகவும். புனித பிரதேசங்களின் நிகழ்வுகள் மற்றும் அப்பிரதேசங்கள் தொடர்பான விபரங்கள் பற்றி அறிக்கைகளைப் பகிர்ந்து வைப்பதற்காகவும் எழுத்துக் கலையைத் தேடிக் கண்டு பிடித்தனர். அரசர்களின் வாழ்க்கையில் நடந்த முக்கிய விடயங்கள் மற்றும் அவர்கள் மற்றவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தொடர்பான அறிக்கைகளை எழுத்தாக்கம் மூலம் சேகரித்துப் பாதுகாத்து வைத்துக் கொண்டனர். இதன்மூலம் எழுத்தாக்கம் மிக விரைவிலேயே வளர்ச்சி பெறத் தொடங்கியது. கி.மு 2700 இல் "கில்கமேஷ்" என்பவன் 'அருக்' நகரின் அரசனாகியதுடன் யுத்த முறைகளின் மூலம் அரசைப் பெருப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





'ஊர்' அரசனின் சமாதியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட ஆட்டின் உருவத்தை ஒத்த தங்கம் மற்றும் வெள்ளியிலான சிலை.



அரசனைக் காட்டும் சிற்பமும், எழுத்தாவணமும்.



உற்சவ காலத்தில் அணியும் தங்கம் மற்றும் வெள்ளியிலான தலைக் கவசம். கி.மு 2200 காலத்தில் ஆட்சி செய்த 'கிக்ஷி மெங்கலடுக்' அரசனுடையது என நம்பப்படுகின்றது.

# மெஸப்பத்தேமியா

## சட்டம்

மெஸப்பத்தேமியாவை நிர்வகித்தவர்கள் ஒரு முறையான நீதிச் சட்டங்களுக்கமைய நிர்வகித்து வந்தார்கள். நீதிச் சட்டங்களைக் கற்றூண்களில் பொறித்துப் பிரதான இடங்களில் மற்றவர்களின் பார்வைக்காக வைத்தனர். கி.மு 2100 இல் "ஊர்" என்ற நகரை நிர்வகித்த "ஊர்நம்பு" என்ற அரசனால் பண்டைய நீதிக்கோவைகள் தயாரிக்கப்பட்டன. இந்நீதிக் கோவைகளில், அடிமைகளுக்கு வழங்கப்பட வேண்டியவைகள், அவர்களை நடத்தும் முறைகள் நாட்டின் பிரஜை ஒருவருக்கு பிரச்சினை அல்லது கஷ்டம் ஏற்படும் இடத்து செய்யப்பட வேண்டிய, மற்றும் அரசன் நாட்டைப் பரிபாலிக்கும் முறைகள் போன்றவை அடங்கியிருந்தன. இவ் 'ஊர்' அரச நீதிக் சட்டங்களை முறையாகப் பின்பற்றும் நடைமுறையில் மிகவும் பிரசித்தி பெற்றதாக இருந்தது.

## புனித ஸ்தலங்கள்

மெஸப்பத்தேமியாவில் காணப்பட்ட சகல நகர்களிலும் உயர்ந்த மலைக்குன்றுகளின் மேல் புனித ஸ்தலங்கள் காணப்பட்டன. இப்புனித ஸ்தலங்கள் 'சிகுராட்' என அழைக்கப்பட்டன. இவ்வகையான சிகுராட்கள் சுட்ட செங்கற்களால் அமைக்கப்பட்டிருந்ததுடன் 100 மீற்றர் உயரமும், 100 அகலமும் கொண்டவையாக இருந்தன. இப்புனித ஸ்தலங்கள் சுட்ட செங்கற்களால் அமைக்கப்பட்டிருந்தமையால் பாரிய கட்டிடங்களைத் தாங்கும் சக்தி பெற்றிருக்கவில்லை. இதன் காரணமாக 100 வருடங்களுக்கு ஒரு முறை கட்டாயமாகப் புனருத்தாரணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. நகரின் காவல் தெய்வங்கள் அல்லது தெய்வத்திற்கு மாத்திரமே இந்தச் சிகுராட் ஸ்தலங்களில் பூஜைகள் நடந்தன. காவல் தெய்வங்களின் கீர்த்தியானது காவல் செய்யும் நகர்களின் சக்தியைப் பொறுத்து அமைந்திருந்தது. யுத்தமொன்றில் வெற்றி பெற்றால் இச்சிகுராட் நகர்களின் பக்தர்களின் தொகை அதிகமாகக் காணப்படும். தோல்வி ஏற்பட்டால் இந்நகருக்கு வந்து வணங்கும் பக்தர்களின் தொகை குறைந்து காணப்படும். மெஸப்பத்தேமியாவை ஆட்சி செய்தவர்களில் பலர் மத குருக்களாகவே இருந்தனர். அதேபோல் அரச வாரிசுரிமை பெற்ற குடும்பம் தொடர்ந்தும் அரசாட்சி செய்தது.

கி.மு 2370 ஆம் ஆண்டளவில் "அக்காட் சாகொள்" என்ற அரசன் மெஸப்பத்தேமியாவின் 'நிப்பூர்' என்ற பிரதேசத்தை ஆக்கிரமித்தான். அவனும் அவனுடைய சகாக்களும் சிரியா வரைக்குமான பிரதேசங்களைக் கைப்பற்றித் தம் பிடியின் கீழ் கொண்டு வந்தனர். கி.மு 2000 ஆம் ஆண்டளவில் மெஸப்பத்தேமியாவிற்கு வந்த ஆக்கிரமிப்பாளர்கள் வடக்கு மற்றும் மேற்குப் பிரதேசங்களில் காணப்பட்ட பேரரசுகளை அழித்து மெஸப்பத்தேமியாவைத் தமக்கேற்ற விதத்தில் தம்முடைய முறைகளுக்கேற்ப மாற்றி அமைத்து வாழ்ந்து வந்தனர். கி.மு 1792 இல் பாபிலோனை ஆண்ட "ஹமுராபி" அரசர்கள் மெஸப்பத்தேமியாவைக் கைப்பற்றித் தம்முடைய நிர்வாகத்தின் கீழ் இணைத்துக் கொண்டனர். இவ் இணைப்பைத் தொடர்ந்து வடபகுதிகளில் காணப்பட்ட நகர்கள் மிகப்பலம் வாய்ந்தவையாக மாற்றமடைந்தன. கி.மு 1250 ஆம் ஆண்டளவில் "நினிவே" என்றழைக்கப்படும் பிரதேசத்திலிருந்து படையெடுத்து வந்த 'அசீரியன்' என்றழைக்கப்படும் இனத்தவர்கள் மெஸப்பத்தேமியாவிற்குச் சொந்தமான சிரியா, பலஸ்தீனம் மற்றும் எகிப்துப் போன்ற பிரதேசங்களை ஒன்றிணைத்து மிகப்பெரிய பேரரசு ஒன்றை உருவாக்கினர்.

## மெஸப்பத்தேமியா நாகரிகத்தின் வீழ்ச்சி

கி.மு 626 இலிருந்து கி.மு 539 வரையிலான காலப்பகுதியை மெஸப்பத்தேமியாவில் இறுதி ஆட்சி நிலவிய காலப்பகுதியாகக் குறிப்பிடலாம். இக்காலப் பகுதியின் இறுதியில் "சல்தீன்" என்றழைக்கப்படும் நிர்வாகியே ஆண்டு வந்தான். அதன்பின் "பர்சியன்" என்றழைக்கப்படுபவர்களால் மெஸப்பத்தேமியா கைப்பற்றப்பட அப்பேரரசின் ஒரு பகுதியாக இது சேர்த்துக் கொள்ளப்பட்டது. இன்று மெஸப்பத்தேமியா ஈராக், சிரியா மற்றும் துருக்கி என்றழைக்கப்படும் நாடுகளாகப் பிரிந்து உள்ளது.



## முக்கிய நிகழ்வுகள், ஆண்டுகள்

கி.மு 10000ஆம் ஆண்டளவில் முதன் முதலில் கமத்தொழிலை ஆரம்பித்து வளர்ச்சி கண்டனர்.

கிமு 3500 இல் மிகப்பெரிய கிராமங்கள் உருவாகியதுடன், அதனுடன் மிகப்பெரிய நகர்களும் உருவாகின. இந்நகர்கள், அரசர்கள், குருமார்கள் மற்றும் பிரபுக்களினால் நிர்வகிக்கப்பட்டன.

கி.மு 2370 இல் "அக்காட் சாகொள்" என்ற அரசன் மெஸப்பத்தேமியாவிலிருந்த 'நிப்பூர்' என்றழைக்கப்படும் பிரதேசம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களை ஆக்கிரமித்ததன் காரணமாக மெஸப்பத்தேமியா என்ற பெயர் உலகில் பிரசித்தி பெற உதவியது.

கி.மு 2100 இலிருந்து 1700 வரை 'ஊர்' மற்றும் பாபிலோனியாவால் மெஸப்பத்தேமியா நிர்வகிக்கப்பட்டது.

கி.மு 1792 இலிருந்து 1750 வரையான காலப்பகுதியில் பாபிலோனியா அரச குலத்தவர்களான "ஹமுராபி" வம்ச அரசர்களால் மெஸப்பத்தேமியா நகர்கள் ஒன்றிணைக்கப்பட்டதுடன் நீதிச் சட்டங்களுக்கமையப் பரிபாலனம் செய்யப்பட்டது.

கி.மு 1250 இல் அசீரியன் என்றழைக்கப்படும் பேரரசு வியாபிக்கப்பட்டது.

கி.மு 727 இல் அசீரிய அரசனான 3ஆவது "டிக்லாத் பிளேசர்" என்ற பேரரசனால் மெஸப்பத்தேமியா கைப்பற்றப்பட்டது.

கி.மு 627 இல் அசீரிய பேரரசனான சாட் அரசனின் காலத்தில் வீழ்ச்சி காணப்பட்டது.

கி.மு 626 இல் "சர்தீன்" பேரரசின் ஆரம்பம்.

கி.மு 539 இல் பர்சியர்களால் மெஸப்பத்தேமியா கைப்பற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவியற் கலசம்

பருக்கை : 30

அநு. வை. நாகராஜன்



அன்புச் செல்வங்களே!
எமது கலசத்தில் இதுவரை சுவைத்தவற்றை விட, இனிச் சமுத்திரவியல் **(Oceanography)** தொடர்பாகப் பார்ப்போம். இத்தொடரில் இது, 'நீர்க்கோளத்தின் உருவாக்கமும், உள்ளடக்கமும்' எனும் பகுதி தொடர்கிறது. இதனைத் தொடர்ந்து சமுத்திரத்தின் பயன்பாடு பற்றியும், அதில் வாழ்வன பற்றியும் இனி வரும் பருக்கைகளிற் பார்ப்போம். வாசியுங்கள். வாசித்தவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
நன்றி.

# நீர்க்கோளத்தின் உருவாக்கமும் உள்ளடக்கமும்

புவியின் மேற்பரப்பில் மூன்றில் இரண்டு மடங்கு கடல், சமுத்திர நீரால் நிறைந்து, சூழ்ந்து இருக்கிறது. இந்நீரானது எந்நேரமும் அசைந்து கொண்டும் சுழியாற் (Current) சுழன்று ஓடி இயங்கிக் கொண்டும் இருக்கிறது.

இந்நீரின் ஊடே கோடிக்கணக்கான உயிரினங்களும், பல்வகைத் தாவரங்களும் வாழ்கின்றன. பன்காலிகள் (Shrimps), ஜெலி மீன்கள் (Jelly fish), சுறாக்கள், திமிங்கிலங்கள் போன்ற மீன் இனங்களும் இன்ன பிறவும் வாழ்கின்றன.

நீரின் ஆழத்தில், புவி மேற்பரப்புப் போல் தரைக்கோட்டு (Contour) அமைப்பில், உயர்-தாழ் நிலப் படுக்கைகள் உள்ளன. அவற்றிடையே, சுரங்கம் போன்ற குகைகளும், பள்ளத்தாக்குகளும், குன்றுகளும், குழிகளும் உள்ளன. இக்கடற் படுக்கைகள் தரைத்தோற்ற அமைவுக்கமைய அடிக்கடி மேற்றளங்களிலும், அடித்தள அகழ்வுகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

புவியின் ஆழ் பரப்பில் நிரந்தரமாகக் கொதித்துக் கொண்டிருக்கும் பாறைக் குழம்புகளின் (Magma) தாக்கத்தால் மேற்றள இறுகிய பாறைகளில், அழுத்த விசையால் வெடிப்புகள் ஏற்படும். அவ்வேளையில் கீழ்த்தளப் படை (Mantle) மேலே தள்ளப்பெறும். அதனால் நீரின் அடி மட்டத்துப் பாறையின் மேற்படைப் பாறையுடன் நீரில் அமிழ்ந்து மூழ்கி விடும். கடல் ஆழத்தில் உள்ள எரிமலைகளும் (Volcanous) அவ்வெடிப்புகள் ஊடாக வெளியேறும். கடலின் மேல்மட்டத்தில் அவை சங்கிலித் தொடரில், தீவுக் கூட்டங்களையும், (Archipelago) பெரு நிலப் பரப்புகளான கண்டங்களையும் (Continents) உருவாக்கிக் கொள்கின்றன.

இந்த வகையில், நிலப்பரப்புக் கடல்களாலும் சமுத்திரங்களாலும் நீராற் சூழப் பெற்றிருக்கின்றது. இப்பரந்த நீர்ப்பரப்புச் சுமார் 139 மில்லியன் சதுர மைல் வரை நிலத்தைச் சூழவிருக்கிறது. இந்நீர்ப்பரப்பை விண்ணிலிருந்து பார்த்தால், நீல நிறக் கோளமாகவும் அதனுள் அடங்கும் கண்டங்களும் தீவுகளும் திட்டுத் திட்டாக, கபில நிறத் தோற்றத்திலும் காட்சியளிக்கும்.

இங்கே கூறிய நிலப்பரப்பு ஆதியில், நீராற் சூழப் பெற்றிருக்கவில்லை. அத்துடன் இன்று நாம் காணும் கண்டங்களும் தீவுகளும் அன்று இருக்கவில்லை.

புவியின் அடித்தளத்தில் அக்கினிக் கோளமாக ஆயிரக் கணக்கான எரிமலைகளின் துண்டங்களாக இருந்தன. அவ்வெரிமலைகள் வெடித்துச் சிதறியபோது, அவற்றில் இருந்து வாயுக்கள் கிளர்ந்தெழுந்து வெப்ப ஆவியாகி, நீருடன் கலந்து வெளிப்பட்டன. முக்கியமாக, காபனீரொக்சைட்டே நீருடன் கலந்திருக்கிறது. இது



வாயு மண்டலமாகி அதனுள் இரண்டறக் கலந்து கொண்டது. நாளடைவில் இவ்வாயு மண்டலத்தின் ஈரப்பதன் (Hundity) நிலப்பரப்பைக் குளிர வைத்தது. இவ் ஈரப்பதனின் செய்முறை, மழை பொழியவும் வழி வகுத்தது.

இவ்வாறுதான், எரிமலைகள் மேலும் மேலும் வெப்ப ஆவிகளை உண்டாக்கி ஒரு சுற்றோட்ட முறைமையில் தொடர்ந்தது. பல்கோடி ஆண்டுகள் இந்த நடைமுறை காரணமாக மழைநீர், நிலப்பரப்பில் தேங்கி நிற்க, அதுவே காலக் கிரமத்தில் கடல்களாகவும் பெருஞ் சமுத்திரங்களாகவும் உருவெடுத்தன.

இவ்விதம் ஆரம்பக் கட்டத்தில் உருவான நீர்த் தேக்கங்களுக்கு இடையில், துண்டு, துண்டுகளாகப் பிரிந்த உருவங்களே மேலே கூறிய கண்டங்களும் தீவுகளுமாம். பெரு நிலப்பரப்புகள் ஒன்றிணைந்த கண்டங்களாகவும், சிறு சிறு நிலப் பரப்புகள் தீவுகளாகவும் பெயர் பெறும். இத்தீவுக் கூட்டங்கள் ஒரு சங்கிலிக் கோர்வை போல் ஒன்றோடு ஒன்று சேர்ந்து இருக்க ஓர் இயல் தன்மை கொண்டதாக அமையும். இவை யாவும் கால மாற்றத்தில் ஏற்பட்ட அழிவும், தோற்றமும் கொண்ட எச்சங்கள் எனின் மிகையாகாது.

பொதுவாகச் சமுத்திரங்களின் நீர், மழை மூலமே பெறப்படுகின்றது. இந்நீரே ஓரிடத்தில் நில்லாது இயங்கிக் கொண்டே இருக்கும். அதாவது, ஒரு சுற்றோட்ட (Cycle) வடிவில் இயங்கிக் கொண்டிருக்கிறது. சூரியன் சமுத்திர நீரை வெப்பமாக்கி அதனை வளி மண்டலத்தை நோக்கிச் செலுத்திக் கொள்கிறது. இவ்வெப்ப நீராவி, பவனத்திற் குளிர்ந்து கொள்ளும். அவ்விதம் அது குளிர்ந்து கொள்ளும் பொழுது, அது முகிலாகிப் பவனத்தில் மிதந்து உலாவும். அதுவே மழையாக மாறி மீண்டும் நிலத்தை வந்தடையும். நிலத்தில்-நீரோடைகளிலும், நதிகளிலும் சேரும் மழை நீர் கடலை நாடி ஓடிக் கலந்து கொள்ளவுஞ் செய்யும்.

புவியில்-கடல் நீர் 96.5 வீதமாக இருக்கிறது. மிகுதியான 3.5 வீதமும் உப்புப் போன்ற கனியங்களில் அடங்கும். இதிற் கூடிய அளவு சோடியம் குளோரைட்டே அதிகளவு அடங்கி இருக்கும். சமுத்திரம், நிலத்தின் பரப்பளவில் ஏறக்குறைய 70 வீதம் கொண்டும், சராசரி 12,000 அடி ஆழங் கொண்டும் இருக்கிறது. ஆதலின் அது கடல் வாழ் உயிரினங்களுக்கும், தாவரங்களுக்கும் போதிய அளவு இடமளிக்கிறது. குறிப்பாக, இவ்வாறான இடங்களில் சமுத்திரக் கரையை அண்டிய உப்புத் தண்ணீர் (Shallow-Water) நிலைகளே உள்ளன. ஆயினும், ஆழ் சமுத்திரப் பகுதிகளிலும் உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற இடங்களும் உள்ளன.

புவியின் வாழ்வு, சமுத்திரத்தின் ஓரங்களில் ஆரம்பமாகியது. கடல் நீரில் இரசாயனக் கனியங்கள் உள்ளடங்குகின்றன. இது கடற் கரைப் பாறை, உயிரினங்களை உருவாக்குகின்றன. அங்கு, ஓரிழைய விலங்கினங்கள் உற்பத்தியாகின்றன.

இதே வேளையில், புவியின் மேற்பரப்பில் தாவரங்கள் தேவை யான ஒக்சிசனை உண்டு பண்ணி உதவுகின்றன. இவ்வொக்சிசன் கடல் நீரிற் கலந்து அங்குள்ள உயிரினங்களுக்கும் குறிப்பாக பிளாக்கொடர்ம் (Placoderms) எனப்படும் மீன் போன்ற முள்ளந்தண்டு இனத்துக்கும் ஒக்சிசனை அளித்துக் கொள்கிறது. முண்ணாண் உடைய உயரினங்கள் இங்கு முதன் முதலாக உருவாக உதவியது. இது முட்தகடு (Bony Plates) போன்ற உறுப்புகளால் ஆகியிருக்கும். இவையே, நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய உயிரினங்களின் (Amphibians) மூதாதையராகும்.

கடல் வாழ் மீனினம் பரிணாம வளர்ச்சியின் பயனாகச் சுறாப் போன்ற உயிரினங்களை வேட்டை ஆடும் விலங்கினங்களாக (Predators) உருவாகின. இவற்றுக்கு, என்பிழையம் (Cartilage) வரையிலான நவீன என்புடை மீனின விருத்தியையும் இணைத்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லங்கள் தோறும் இலங்கை நூல்கள் அறிமுக அரங்கு

தேசிய கலை இலக்கியப் பேரவை தனது புத்தகப்பண்பாட்டுப் பயணத்தில் 1986ம் ஆண்டிலிருந்து இதுவரை 106 நூல்களை வெளியிட்டுள்ளது. இந் நூல்களையும் ஏனைய இலங்கை எழுத்தாளர்களின் நூல்களையும் பரந்தளவில் விநியோகம் செய்வதற்கான புதுமுயற்சியில் இறங்கியுள்ளது.

முதலில், கொழும்பு மாவட்டத்திலுள்ள தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இல்லங்கள் தோறும் நூல்களை விநியோகிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதத்தகப் பண்பாட்டுப் பேரவை என்ற அமைப்பினுள் எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், வெளியீட்டாளர்கள், வாசகர்கள் இணைகின்றனர். இவர்கள் மத்தியில் புரிந்துணர்வையும் ஒருமைப்பாட்டையும் பன்முகச் செயற்பாட்டையும் தூண்டும் வகையில் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு கொழும்பிலுள்ள நூறு இல்லங்கள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களின் சூழலில் வாழும் பத்துப்பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

முதல் கட்டமாக, இப்பத்துப்பேரும் குறிக்கப்படும் ஒரு தினத்தில் இணைப்பாளராகச் செயற்படுபவரின் வீட்டில் ஒன்று கூடுவர். இவ் ஒன்றுகூடல் இருமணி நேரம் இடம் பெறும். 'இதில் ஏற்கனவே தேசிய கலை இலக்கியப் பேரவையால் வெளியிடப்பட்டுள்ள புத்தகக் கையேட்டிலுள்ள நூல்கள் பற்றிய அறிமுகம் செய்யப்படும். அறிமுகத்தைத் தொடர்ந்து நூல்கள் பற்றிய அபிப்பிராயம் பரிமாறிக் கொள்ளப்படும்.

ஜம்பது தலைப்புக்களுக்கு மேற்பட்ட அப்புத்தகக் கையேட்டிலிருந்து ஆயிரம் ரூபா (ரூபா.1000/-) பெறுமதியான நூல்களைத் தமது விருப்பிற்கேற்ப தெரிவு செய்து கொள்ளுவர். அவர்களிடம் அன்றைய தினமே நூல்கள் விநியோகிக்கப்பட்டு பணம் பெற்றுக் கொள்ளப்படும். அப்பணம் பெற்றுக் கொண்டமைக்கான பற்றுச்சீட்டு வழங்கப்படும். இதன் மூலம் ரூபா.50,000/- வாசகர் பணப்பரிசு வெல்லும் திட்டத்தில் இவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். மேலும் புத்தகப் பண்பாட்டுப் பேரவையின் விநியோக வலையமைப்பின் பங்காளர்களாக மேற் கொண்டு செயற்படுவதற்கான உறுப்பினர்களாக அவர்கள் கருதப்படுவார்கள்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 19ம் திகதி மாலை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடாத்தப்படும் "புத்தகப் பண்பாட்டுப் பயணம்- 2005" நிகழ்வில் குறித்த பற்றுச்சீட்டு இலக்கங்கள் குலுக்கப்பட்டு தெரிவு செய்யப்படும் வாசகருக்கு ரூபா.50,000/-பணப்பரிசு வழங்கப்படும்.25-வயதுக்குட்பட்ட இலங்கைப் பிள்ளைகளிடமிருந்து கலை இலக்கிய கர்த்தாக்கள், நூல்கள், இலக்கிய நிறுவனங்கள், சஞ்சிகைகள் தொடர்பான கேள்விகள் கேட்கப்பட்டு பத்துக் கேள்விகளிற்கு மேல் சரியான விடையளித்து அதில் கூடிய புள்ளிகள் பெறுபவருக்கு அன்றைய தினம் அதே அரங்கில்ரூபா.10,000/-பணப்பரிசு வழங்கப்படும்.

முதலாவதாக இடம்பெறும் இக் கலந்துரையாடலில் 19.08.2005 ம் திகதி நடைபெறவுள்ள

**மேலும் விபரங்களுக்கு**

**தேசிய கலை இலக்கிய பேரவை,**
**இல. 44, 3ஆம் மாடி சி.சி. எஸ்.எம்.**
**கட்டிடத்தொகுதி - கொழும்பு - 11**
**தொலை. பே. 2335844**




# ஒரு தொழிற்சங்கவாதியின் நாவல்

ஒரு தொழிற்சங்கவாதி நாவல் எழுதினால் அதன் கதாநாயகன் தொழிற்சங்கவாதியாகத்தான் இருப்பான் என்பதற்கமைய, 'மாத்தளை ரோகிணி' என்ற புனைபெயர் கொண்ட டி.ஐயாத்துரை எழுதியுள்ள இந்நாவலும் அமைந்துள்ளது.




இந்நாவலாசிரியர் கம்பொல, புசந்தன்னைத் தோட்டத் தொழிலாளியாக இருந்து 1966 ஆம் ஆண்டு தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்து தோட்டக் கமிட்டி, மாவட்டக் கமிட்டி என்று செயற்பட்டு, 1968 ஆம் ஆண்டு சங்கத்தின் உதவிப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்பு 1970ல் அச்சங்கத்தின் தலைவராகி இன்று வரை தோட்டத் தொழிலாளரின் உரிமைக்காகக் குரல் கொடுத்து வருகின்றார்.

மலையகத்தின் மூத்த எழுத்தாளர் சி.வி.வேலுப்பிள்ளையை எழுத்தாசானாகக் கொண்டு எழுதும் இவர் இதுவரை மலையகச் சமூகப் பிரச்சினை தொடர்பான 4 நாவல்களை எழுதியுள்ளார். மாத்தளை ரோகிணி நாவல்களைத் தவிர சிறுகதைகள், அரசியல் கட்டுரைகள், விமர்சனம் என்று பல துறைகளிலும் கால் பதித்தவராவார். நூலாசிரியர் முகவரி : 51/1, ஆற்றங்கரை வீதி, களுதாவெல, மாத்தளை.

# சாதியமைப்பின் எச்ச சொச்சங்கள்




தமிழ்ச் சமூகத்தில் சாதி வேறுபாடுகள் என்ற அநீதி மிக நீண்ட காலம் வேரூன்றி இருந்ததால் அதன் எச்ச சொச்சங்கள் இன்னமும் நீங்கிய பாடில்லை. இப்போதும் திருமணம் என்று வந்தால் என்ன சாதி என்ற கேள்வியே முன்னுக்கு வருகின்றது. இன்று குறைந்த சாதியினரும் கூட உயர்கல்வி கற்றுச் சமூக ஏணியில் ஏறிவிட்ட நிலையில் சாதியடையாளங்கள் மெல்ல மறைந்து வருகின்றன. இந்தியாவில் 'தலித்' என்ற மக்களமைப்புச் சாதிப்பாகுபாடுகளுக்கு எதிராகப் பலமாகக் குரல் கொடுத்து வருகின்றது. யாழ்ப்பாணத்துச் சமூகத்தில் தீண்டாமை உச்சக் கட்டம் அடைந்திருந்த போது "சாதியமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்ற வெகுஜனப் போராட்டங்கள் பல நிகழ்த்தப்பட்டன. அத்தகைய போராட்டத்தில் எழுந்த பிரசவம் தான் இக் "கந்தன் கருணை" என்ற நூலாகும்.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 100வது வெளியீடாக வெளிவந்துள்ள இந்நாடக நூலில் மூன்று நாடகங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. எழுத்தாளர் என்.கே.ரகுநாதன், 11.12.1999ல் நூலாக வெளியிட்ட எழுத்துருவும், அம்பலத்தாடிகள் 21.10.1973ல் வெளியிட்ட நூலின் பிரதியும் மற்றும் நடிகர் ஒன்றியம் தயாரித்த எழுத்துக்களும் இணைக்கப்பட்டுள்ளன.

இதனைத் தவிர இந்நாடகம் தொடர்பாக இளைய பத்மநாதன், இ.சிவானந்தன், சி.மௌனகுரு, க.சொக்கலிங்கம், இ.முருகையன், சி.கா.செந்திவேல், எச்.எம்.பி. மொஹிதீன், பேராசிரியர் சி.மௌனகுரு, ஏ.சி.தாஸியஸ் ஆகியோரின் கருத்துக்கள் கட்டுரைகளாகத் தொகுக்கப்பட்டு பின்னிணைப்புக்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. விலை. ரூ.200/=. கிடைக்குமிடம்: South Asian Books, 44, 3rd Floor, CCSM Complex, தொ.பே.2335844 மற்றும் 405, Stanely Road, Jaffna.

# அழிக்க வந்த சுனாமியும் சுழற்றியடித்த சூறாவளியும்

ஏறாவூர் கவிஞர் எம்.எம்.எம்.இஸ்மாயில் 'சுனாமியும், சூறாவளியும்' என்ற ஒரு கவிதை நூலை வெளியிட்டுள்ளார். 22 பக்கங்களைக் கொண்ட இச்சிறு நூலில் 2004 டிசம்பர் சுனாமியின் அழிவு பற்றியும், அதன் பின் சுனாமி நிவாரணத்தில் முறைகேடுகள் பற்றியும் பதிவுகள் செய்துள்ளதுடன், நூலின் அரைப் பகுதியைத் தான் முன்பு 1978 ஆம் ஆண்டுச் சூறாவளியின் போது கிழக்கு மாகாணம் பட்ட துன்பத்தை விவரித்து எழுதிய கவிதைகளுக்கு. ஒதுக்கியுள்ளார்.

இந்நூல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் இந்நூலின் ஆசிரியர் எம்.எம்.எம்.இஸ்மாயில் "சகலரையும் பீதிக்குட்படுத்தி உயிர்களையும், உடைமைகளையும் சூறையாடிய சுனாமி பற்றியும், 1978 ஆம் ஆண்டு இதே போல் வீசியடித்த சூறாவளி பற்றியும் என்னால் முடிந்த அளவுக்கு எதிர்கால சந்ததியினர்க்கு விழிப்பூட்டும் வகையில் காவியமாகப் படைத்துள்ளேன்" என்று குறிப்பிட்டுள்ளர். இந்நூலின் சுனாமி பற்றி 87 நான்கு வரிக் கவிதைகளும், சூறாவளி தொடர்பிலான 80 நான்கு வரிக் கவிதைகளுமுள்ளன.

விலை: ரூ.50/=, முகவரி: எம்.எம்.எம்.அஸ்ரப் வீதி, ஏறாவூர். தொ.பே: 2240994.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாட்டின் பெயர் : ரஷ்யா அல்லது ரஷ்ய சம்மேளனம்
கண்டம் : ஐரோப்பா
வலயம் : கிழக்கு ஐரோப்பா மற்றும் வடஆசியா
எல்லைகள் : வடக்கே: ஆர்ட்டிக் சமுத்திரம், பெரன்ட்காரா, லெப்டெவ், கிழக்குச் சைபீரியா மற்றும் வுக்ச் கடலையும், கிழக்கேப் பசுபிக் சமுத்திரம், பெரிங் கடல், ஒகொஸ்டா மற்றும் யப்பான் கடலையும்,
வடமேற்கே : நோர்வேயையும்,
தென்கிழக்கேயும் தெற்கேயும் : மொங்கோலியா. கஸகஸ்தான், கஸ்பியன் கடல் அஸர்பைஜான், ஜோர்ஜியா மற்றும் கருங்கடலையும், தென் மேற்கே: உக்ரேன்,
மேற்கே : பெலருஸ், லத்திவியா, எஸ்தோனியா. பின்லாந்து குடா, பின்லாந்தையும்,
வடமேற்கே : நோர்வேக் குடியரசையும் எல்லைகளாகக் கொண்டிருப்பதுடன் லித்துவேனியா மற்றும் போலந்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.




# ரஷ்யா

## தரைத்தோற்றம்

உலகின் மிகப் பெரிய நாடு ரஷ்யாவாகும். இது 17,075,200 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது. உலகின் மொத்த நிலப் பரப்பில் 1/9 பங்கினை இந்நாடு கொண்டுள்ளது. இதனடிப்படையில் பார்க்கும்போது அமெரிக்கா மற்றும் சீனாவின் இரு மடங்கினை ரஷ்யாவின் நிலப்பரப்புக் கொண்டுள்ளதாகும். வடக்கிலிருந்து தெற்கான தூரம் 4000 கிலோ மீற்றராக உள்ளது. கிழக்கிலிருந்து மேற்காக 10,000 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்டுள்ளது. இதன் பெரும்பரப்பு காரணமாக ஐரோப்பா மற்றும் ஆசியா இரு கண்டங்களிலும் தன் எல்லைகளைக் கொண்டுள்ளது.

ரஷ்யாவின் மிகப் பெரிய நிலப்பரப்புக் காரணமாக நாட்டின் நேரத்தை 11 பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். பெரும் நிலப்பரப்பு மட்டுமன்றிப் பல தீவுகளையும் ரஷ்யா தன்னகத்தே கொண்டுள்ளது. இவை யாவற்றையும் கொண்டு நோக்கும்போது உலகின் அதிக நிலப்பரப்பைக் கொண்ட நாடாக இதனைக் குறிப்பிட முடியும்.

தென் பகுதியிலுள்ள மலைத்தொடர்களில் கோக்கேசியன் மலைகளைக் காணலாம். இம் மலைகளில் 5642 மீற்றர் உயரமுடைய கஸ் எனும் மலை உயரமுடையதாகக் கருதப்படுகின்றது. இதுவே ஐரோப்பாவின் உயர்ந்த மலைச் சிகரமாக உள்ளது. மேற்குச் சைபீரியப் பிரதேசத்தில் அதிக தாழ் நிலங்களையே காணலாம்.



## நதிகளும், ஏரிகளும்

சைபீரியப் பிரதேசத்திலேயே ரஷ்யாவின் மிகப் பெரிய நதிகள் உள்ளன. ஒபி மற்றும் இர்டிஷ் நதிகள் இவற்றில் பிரதானமானவை. இவ்விரு நதிகளும் ஒன்றாக இணைவதன் காரணமாக 5410 கிலோ மீற்றர் நீளமுள்ள நதியொன்று உருவாகின்றது. இந் நதிகளுடன் இணையும் கிளை நதிகள் பலவும் உண்டு. ஒன்சீன் மற்றும் ஷிகா என்னும் கிளை நதிகள் இவற்றில் முக்கியமானவை. வொல்கா ரஷ்ய நாட்டின் மூன்றாவது மிகப் பெரிய நதியாக உள்ளது. இவற்றை விட நீர்வழிப் போக்குவரத்திற்காகப் பயன்படும் நதிகள் பல இங்கு உள்ளன. ரஷ்யாவில் பல ஏரிகளும் அதிகமாகக் காணப்படுகின்றன. இவற்றில் மிகப் பெரிய ஏரியாகக் கஸ்பியன் கடல் உள்ளது. உலகின் மிகப் பெரிய ஏரியும் இதுவே ஆகும். பைக்கால் ஏரி இரண்டாவது மிகப்பெரிய ஏரியாக உள்ளது. இதன் ஆழமானது 1637 மீற்றராக உள்ளது. ரஷ்யாவின் மிகப் பெரிய ஏரிகளாக லடோகா மற்றும் ஒனேகா உள்ளன.

## விலங்குகள்

ரஷ்யா மிகப் பெரிய நாடாக இருப்பதன் காரணமாகப் பல்வகைப்பட்ட பிரதேசங்கள் மற்றும் வலயங்கள் காணப்படுகின்றன.இதனால் வித்தியாசமான விலங்குகளைக் காணக்கூடியதாக உள்ளது. துந்திரா என்றழைக்கப்படும் பகுதியில் ஆர்ட்டிக் மற்றும் வட துருவப் பகுதிகளிலுள்ள தீவுகளில் போலோ கரடிகள், சீல் மீன், கடற் சிங்கங்கள், ஆக்டின் கரடிகள், பீரினி மான்கள் போன்றவை வாழ்கின்றன. குளிர் பிரதேசங்களில் வாழும் பறவை இனங்கள் பலவற்றையும் இவ் வலயத்தில் காணக்கூடியதாக உள்ளது. சேற்று நிலங்கள் பலவும் இப்பிரதேசத்தில் காணப்படுவதன் காரணமாகச் சேற்று நிலங்களுக்கருகில் அதிக பறவையினங்களைக் காணக்கூடிய தாக உள்ளது.

மேற்குச் சைபீரிய வலயத்தினை நோக்கிச் செல்லும் போது பன்றி, மான், ஓநாய்கள், நரி மற்றும் மின்க்ஸ் போன்ற விலங்குகளைக் காணலாம் அதேபோலப் பறவையினங்கள் பலவற்றையும் காணலாம். ரஷ்யாவின் தென் பகுதியிலுள்ள காடுகளில் சைபீரியப் புலிகளைக் காணக்கூடியதாக இருப்பதுடன் இப்புலிகளே மிகப் பெரிய பூனையினமாகக் கருதப்படுகின்றது. கோக்கேசியன் பிரதேச மலை ஆடுகள், கோக்கேசியன் மான், காட்டுப் பன்றிகள், பொர்கோபைன், சிறுத்தைகள், கோவேறு கழுதைகள், நரி அணில் மற்றும் கரடிகளையும் காணலாம்.

## இயற்கை வளங்கள்

உலகில் மற்றைய நாடுகளை விட அதிகளவில் ரஷ்யாவிலேயே கனிய வளங்கள் காணப்படுகின்றன. இங்கு அதிகமாக எரிபொருட்களே காணப்படுகின்றன. உலகில் நிலக்கரி உற்பத்தியில் 50% மானவை ரஷ்யாவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும் நிலக்கரிப் படிவுகளில் அரைப்பங்கு இங்கேயே உள்ளன. மேலும் மிகப்பெரிய பெற்றோலியப் படிவுகளும் இங்கேயே உள்ளன.

நாடு பூராவும் நிலக்கரிப் படிவுகள் பரவியிருப்பதுடன் மிகப்பெரிய நிலக்கரிப் படிவானது கிழக்குச் சைபீரியாவில் காணக்கூடியதாக உள்ளது. மொஸ்கோ நகரின் தெற்கே பிரதான இரும்புப் படிவுகள் காணப்படுகின்றன.



அதைவிட நிக்கல், மங்கனீஸ், கோபால்ற் மற்றும் மொலிப்டினம் என்பனவும் காணப்படுகின்றன. ஈயம், செம்பு, துத்தநாகம், வெள்ளி மற்றும் பொன் என்பனவும் இங்கு காணப்படுகின்றன.

## காலநிலை

ரஷ்யாவின் அதிகளவிலான பிரதேசங்களில் துந்திரா காலநிலை காணப்படுகின்றது. குளிர் காலநிலை நீண்டதாக இருக்கின்றது. கோடை காலத்தில் வெப்பநிலை குறைவாகக் காணப்படுகின்றது. ரஷ்யா வட துருவப் பகுதிக்கு அண்மித்ததாகக் காணப்படுவதன் காரணமாகக் கோடை குளிராகக் காணப்படுகின்றது. அத்திலாந்திக் சமுத்திரத்திலிருந்து மேற்கு நோக்கி வீசும் காற்றுக்களின் செல்வாக்குக் காரணமாக ரஷ்யாவிற்கு மட்டுமன்றி ஐரோப்பாவிற்கும் சைபீரியப் பிரதேசம் அதிக குளிராகக் காணப்படுகின்றது. ஆனால் அதிகமான பிரதேசங்களுக்கு மழை போதியளவு கிடைப்பதில்லை. இதன் காரணமாகக் கோடைக் கால ஆரம்பத்தின் போது அதிக வரட்சி காணப்படுகின்றது.

## சனத்தொகை

உலகில் அதிக சனத்தொகை கொண்ட நாடுகளில் ஆறாவது இடத்தை ரஷ்யா பிடித்துள்ளது. ரஷ்யாவில் அதிகூடிய சனத்தொகை மண் வளம் மிக்க பகுதிகளிலேயே காணப்படுகின்றது. இரண்டாவது உலக யுத்தத்தின் பின்பு கைத்தொழில் மயமாகியதன் காரணமாகப் பலர் கிராமப் பகுதிகளைக் கைவிட்டு நகரப் பகுதிகளில் வாழப் பழகிக் கொண்டனர். உலகின் அதிக இனங்களைக் கொண்ட நாடாக ரஷ்யாவைக் குறிப்பிடலாம். இதில் பிரதான இனமாக ரஷ்யர்கள் உள்ளனர். இவர்களை விட 32 இனத்தவர்கள் இங்கு வாழ்கின்றனர்.

* மொத்த சனத்தொகை : 144,526,280 பேர்
* வயதடிப்படையில் : 0-14 வயதிற்கிடையில் 16% த்தினர் 15-64 வயதிற்கிடையில் 70.4% 65 இற்கு மேல் 13.6%
* சனத்தொகை வளர்ச்சி வேகம் : 03%
* ஆண், பெண் விகிதம் : ஆண் 0.88, பெண் 01
* எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் : 67.66 வருடங்கள்
* எயிட்ஸ் நோயாளர்கள் அல்லது வைரசால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை : 700,000 பேர்
* சனத்தொகை அடர்த்தி : 1 சதுர கிலோமீற்றருக்கு 08 பேர்
* இனம் விகித அடிப்படையில் ரஷ்யர்கள் 81.5% சுவாஸ் 1.2% டாடா 3.8% பஸிகிர் 0.9% உக்ரேன் 3%
* பிற இனத்தவர்கள் 8.1%

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன்? எப்படி?

** இலங்கையைச் சுற்றி வரக் கடல் காணப்படுகின்ற போதிலும் குறிப்பிட்ட சில இடங்களில் மாத்திரம் உப்பளங்கள் காணப்படுகின்றன. இவ்வாறு உப்பு விளைச்சலானது குறிப்பிட்ட சில இடங்களில் மாத்திரம் ஏன் மேற்கொள்ளப்படுகின்றது?

உப்பானது கடல் நீரிலிருந்து பெறப்படுகின்றது. குறிப்பாகக் கடல் நீரானது ஆவியாகக் கூடிய தட்பவெப்பநிலை இருக்கக் கூடிய இடங்களிலேயே இது சாத்தியப்படும். ஏனெனில் உப்பு வயல்களில் சேமிக்கப்படுகின்ற கடல் நீரானது கடும் சூரிய வெப்பத்தின் காரணமாக ஆவியாகும் போது அங்கு உப்புக்கட்டிகள் மீதமாகின்றன.



அதுமட்டுமன்றிக் கடும் வறட்சியுள்ள பிரதேசங்களில் மழைநீரும் அதிக நாட்கள் தேங்கி நிற்காமல் உடனே அவை ஆவியாகி விடுகின்றன. ஆகையினால், அப்பகுதிகளில் உப்பினை இலகுவாக மீதப்படுத்த முடியும். எனவேதான், கடும் வறட்சியுள்ள பகுதிகளில் உப்பளங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.


மழை நீரானது அருந்துவதற்கு உகந்தது எனக் கூறப்படுவது உண்மையா?

உண்மைதான்! எந்தவொரு திறந்த நீர் நிலையிலிருந்தும் சுத்தமான நீரே ஆவியாகின்றது. இவ்வாறு ஆவியாகின்ற சுத்தமான நீரே வானத்தில் மேகங்களுடன்



கலந்து பின்னர் மீண்டும் மழையாகப் பூமியை நோக்கிப் பொழிகின்றது. எனவேதான், இந்த மழைநீர் சுத்தமான நீர் எனக் கருதப்படுகின்றது.

# பக்ற்றீரியாக்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?



பக்ற்றீரியாக்கள் கண்களுக்குப் புலப்படாத நுண்ணுயிர்களாகும். அவற்றைப் பார்க்க வேண்டுமானால் பலமுறை பெருப்பிக்கக் கூடிய நுணுக்குக் காட்டிக் கண்ணாடிகளைப் (Microscope) பயன்படுத்த வேண்டும்.

இந்தப் பக்ற்றீரியாக்களைக் கண்களால் பார்க்க முடியாவிட்டாலும் அவற்றின் செயற்பாடுகள் பற்றிய அறிவு மனிதனுக்கு இருந்து வருகின்றது.

திராட்சைச் சாற்றைப் பாத்திரத்தில் ஊற்றிக் காற்றுப் புகும்படி திறந்து வைத்திருந்தால் அது இயல்பாகவே வைன் ஆகின்றது. பால் பழையதாகின்ற போது பக்ற்றீரியாக்களின் செயல்பாட்டால் புளிப்படைகின்றது. இந்தச் செயல்பாட்டைப் பால் கட்டியாதல் (தயிர்) என்று அழைப்பர்.

இறந்து போன உயிரினங்கள் தாவரங்கள் முற்றாக அழிந்து போவதும் பக்ற்றீரியாக்களின் செயல்பாட்டால் ஆகும்.

ஆனாலும் ஆதிவாசிகள் இந்தச் செயற்பாடுகளைப் பேய், பிசாசு, பூதங்களின் செயல்பாடு என்றே நம்பினர்.

இத்தகைய சக்திமிக்க பக்ற்றீரியாக்கள் வளியில் மாத்திரமின்றி நீர், உணவு வகைகள், மனித உடலின் மேற்பரப்பில் அல்லது உள்ளுறுப்புக்களில் கூட இருக்கலாம். இந்தப் பக்ற்றீரியாக்களுக்கு வெளிப்பாகத்தில் பகுதி, பகுதியாகப் பிரிந்து தனித்தனியாக விரிந்து பரவும் ஆற்றல் உண்டு.

பக்ற்றீரியாக்கள் ஒரே தனிக்களத்தைக் கொண்டனவாகும். பக்ற்றீரியாக்களுக்குள் இருக்கும் திரவம் "புரடோப்ளாசம்" என்றழைக்கப்படுகின்றது. அதற்கு அணு ஆற்றல் இல்லாவிட்டாலும் வெளிக் கவசங்கள் ஊடாக இரசாயனத் திரவங்களுக்குள் புக முடியும்.

ஆனாலும் சில வகையான இரசாயனப் பதார்த்தங்கள் பக்ற்றீரியாக்களை அழிக்கும் சக்தி கொண்டனவாகும். பக்ற்றீரியாக்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்ததாக நூல் போன்ற ஒன்றில் கோர்வையாகக் காணக் கூடியதாகும்.

உடம்பில் காயங்கள் ஏற்பட்டாலும் அவை மிகவும் மோசமடைந்து அழுகிப் போய்ச் சீழ் வடியும் நிலை உருவாகவும் பக்ற்றீரியாக்கள் காரணமாகின்றன.


இந்தப் பக்ற்றீரியாக்களால் நன்மைகளை விடத் தீமைகளே ஏராளமாக நிகழ்கின்றன.

# நச்சுக் கிருமிகள்

ஆதிகால மக்கள் மனிதர்களுக்கு நோய்களை உண்டு பண்ணுவது பேய், பிசாசு, பூதங்கள் என்றே நம்பி வந்தனர்.

ஆனால் ஆயிரக்கணக்கான வருடங்களாக நிலவி வந்த இத்தகைய சிந்தனை 1865 ஆம் ஆண்டளவில் விஞ்ஞானத்தின் மலர்ச்சியுடன் சுக்குநூறாகிப் போய்விட்டது.

நோய்கள் ஏற்படக் காரணம் நோய்க் கிருமிகளே என்பதை முதன்முதலில் வெளிப்



படுத்தியவர் லூயி பாய்ச்சர் என்ற விஞ்ஞானியாவார்.

மனித உடலுக்கு தீங்கு உண்டு பண்ணக் கூடிய கிருமிகளை-ஒற்றைக் களம் மற்றும் பல களங்களைக் கொள்பவை என்றும் இனங்காண்பர்.

நோய்க் கிருமிகளையும் சாதாரண கண்களால் காணமுடியாது. பலமுறை பெருப்பிக்கக் கூடிய நுணுக்குக் காட்டிகளால் மட்டுமே அவதானிக்க முடியும். சில வகையான கிருமிகள் எந்தளவு சிறியவையென்றால் பலமுறை பெருப்பிக்கக் கூடிய (Microscope) மூலமாகவும் பார்க்க முடியாது.

கிருமிகள் சில சந்தர்ப்பங்களில் இறந்த உயிர்கள் தாவரங்களில் இருந்து பரவுகின்றன.

தாவரக் கிருமிகள் "புரோடசோவா" என்னும் உயிரினங்கள் சார்பானவை பக்ற்றீரியாக்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

இவை இரண்டும் அல்லாத இன்னும் ஒரு வகைக் கிருமியும் உண்டு. அவைதான் "பில்டரபல்" (Fiturable) என்றழைக்கப்படுகின்றன. இவை மனிதனின் தோளைத் துளைத்துக் கொண்டு உடம்பினுள் செல்லக் கூடியனவாகும்.

ஆதலால் வெவ்வேறான இந்தக் கிருமிகள் ஊடாக மனிதனுக்குப் பல்வேறு வகையான நோய்கள் தொற்றுகின்றன.

சாதாரண தடிமலாக மனிதனுக்கு ஏற்படும் நோய் மலேரியா என்ற அளவுக்குக் காரணமாக அமைகின்றது.

சில நோய்க்கிருமிகள் நோய்களுக்கு மருந்துகளைப் பாவிக்கும் போது செயலிழந்து அழிந்து விடுகின்றன. அதன் மூலம் உடலில் நோய் எதிர்ப்புத் தன்மை ஏற்படுகின்றது. அப்போது உடம்பில் மீண்டும் அதே கிருமி புகுந்தால் நோய் எதிர்ப்புச் சக்தி அந்தக் கிருமியை அழித்தொழித்து விடுகின்றது. குறிப்பாக நோய்த் தடுப்பு ஊசிகளை ஏற்றிக் கொள்வதால் குறிப்பிட்ட சில நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

ஆனாலும் சில வகையான மிருகங்களுக்கு அவற்றின் உடம்பில் இயல்பாகவே இந்த நோய்க்கிருமி எதிர்ப்புப் பாதுகாப்பு உள்ளன. அதன் மூலம் அந்த மிருகங்கள் நோய்கள் தொற்றாது பாதுகாக்கப்படுகின்றன.

மிகவும் நுண்ணிய கிருமிகளால், சின்னம்மை, பெரியம்மை, நீரிழிவு, சளி ஜுரம் போன்ற நோய்கள் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இன்றும் சில வகையான நோய்கள் அவை உடம்பினுள் நன்கு முதிர்ச்சியடைந்த பின்பே வெளிப்படுகின்றன. இது மிகவும் ஆபத்தானதாகும்.

# குளோரின் வாயு

குளோரின் என்றவுடன் நீரைச் சுத்திகரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் திரவமே ஞாபகத்திற்கு வருகின்றது.

குளோரின் மூக்கை அரிக்கும் வாசம் உடையதாகும். நச்சுத்தன்மை வாய்ந்ததாயினும் மனிதனுக்குப் பயன் நிறைந்ததாகும்.

தற்போது பயன்படுத்தப்படுகின்ற குளோரினானது 1771 ஆம் ஆண்டு சுவீடன் நாட்டின் விஞ்ஞானியான 'கால்சில்' என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.



பொதுவாக உவர்த்தன்மையான பதார்த்தம் ஒன்றைக் கொண்டே குளோரின் உருவாக்கப்படுகின்றது.

இது நச்சுத்தன்மை வாய்ந்ததாயினும் நீரைச் சுத்திகரிக்க ஒரு சிறிதளவு குளோரினே பயன்படுத்தப்பட வேண்டும்.

இந்தக் குளோரின் இடத்துக்கிடம் கொண்டு செல்லப்படுவது. உச்ச நிலையில் குளிரூட்டி, திரவ நிலைக்குள்ளாக்கி இரும்பு சிலிண்டர்களில் (கொள்கலன்) அடைத்தே கொண்டு செல்லப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைகளில் சுமந்
# பாதுகாக்கு



அவுஸ்திரேலியர் என்றால் 'கங்காருக்கள்' என்று அழைக்கப்படுகின்றனர். இம்மிருகம் இந்நாட்டின் தேசிய இலச்சினையாக இருந்து வருகின்றது.

அவுஸ்திரேலியர் கங்காரு மிருகங்களை அந்நாட்டின் தேசிய விலங்கினமாகத் தெரிவு செய்தது ஏன்? கங்காருகள் அந்நாட்டிற்கு அபிவிருத்தி, செழுமை என்பவற்றைக் கொண்டு வருவதாக நம்புகின்றனர். அத்தோடு கங்காருக்கள் ஒருபோதும் பின்னே செல்லாது முன்னேதான் செல்லும். அவுஸ்திரேலியர்களும் அதுபோல் ஒரு போதும் முன்னே வைத்த காலைப் பின்னோக்கி வைக்கமாட்டார்கள்!



**அவுஸ்திரேலியாவின் அண்மைய ஆய்வுகளின் படி கங்காரு இனம் பெருகி வருவது கண்டறியப்பட்டிருக்கிறது. கங்காருகளின் ஊண் உண்ணும் முறையானது ஆடு, மாடுகளின் தன்மையை ஒத்திருக்கின்றது. இவை ஆடு, மாடுகளைப் போல் அசை போடக் கூடியவைகளாகும்.**



## கங்காருகள் பற்றிச் சுவையான தகவல்கள்

கங்காருகளை நாம் ஆச்சரியத்துடன் பார்க்கின்றோம். அவைகள் தமது வயிற்றின் அடிப்பகுதியில் பையொன்றை இயல்பாகவே பெற்றுள்ளன. அந்தப் பைக்குள் தமது குட்டிகளைச் சுமந்த வண்ணம் பாய்ந்தோடும் வல்லமை பெற்றவையாகும். இந்தக் கங்காருகள் 'மெக்ரோ பொடிடேட்' (Macropodidae) என்ற இனத்தைச் சேர்ந்த விலங்கினமாகும்.

## பாய்ந்தோடும் கங்காரு

கங்காருகள் பாய்ந்து, பாய்ந்தே செல்கின்றன. அவை பாய்ந்து, பாய்ந்து நடமாடும் போது முன்னங்கால்களை மடக்கி வைத்துக் கொள்கின்றன. அதன் உடல் எடையையும் வேகத்தையும் நிர்வகிக்க இவற்றின் வால்கள் பயன்படுகின்றன. இவை எழுந்து நிற்கும் போது இன்னுமொரு கால் போன்று வாலின் துணையுடன் எழுந்து நிற்கும் ஆற்றல் பெற்றன.

அவுஸ்திரேலியா, தஸ்மேனியா போன்ற பிரதேசங்கள் கங்காருகளுக்குப் பெயர் போன பகுதிகளாகும். அங்கு பச்சைப் பசேல் என்ற மேய்ச்சல் நிலங்கள் உள்ளன. கங்காருகள் பெரும்பாலும் நுனிப்புல் மேயக்கூடிய மிருகங்களாகும். இவை தாவர உண்ணிகள் குடும்பத்திற்குரிய மிருகமாகும். இவற்றுக்கு அதிக நீர் தேவைப்படுவதில்லை. சிறிதளவு நீர் போதுமானதாகும். நீரின்றியே மாதக்கணக்கில் இவைகள் உயிர் வாழும் வல்லமை பெற்றுள்ளன.

இவற்றிற்குக் கூர்மையான பார்வை இருந்த போதும் அசையும் வஸ்துக்கள் குறித்தே அவற்றின் பார்வை செல்கின்றது. அதனால் சிறிய ஒலியைக் கூடத் துல்லியமாகக் கேட்கும் ஆற்றல் பெற்றுள்ளன. அவை காதுகளை நான்கு திசைகளுக்கும் திருப்பித் திருப்பி வரும் ஓசையைச் செவிமடுக்கக் கூடியனவாகும்.



## குட்டிகளைப் பிரசவித்தல்

கங்காருகள் வருடாந்தம் குட்டிகளை ஈன்று கொள்கின்றன. பெரும்பாலும் பெண் கங்காரு ஒன்று ஒரு முறை ஒரு குட்டியையே ஈன்றெடுக்கும். குட்டி பிறந்து ஆகக் கூடியது 9 மாத காலம் வரை தன் தாயின் வயிற்றுக்கு அடிப்பாகத்தில் உள்ள பைக்குள் இருந்தவாறு உலா வரும். அதன் பின்னர் வெளியே உலாவத் துவங்குகின்றது. படிப்படியாகத் தாவரங்களை மேய ஆரம்பிக்கின்றது. இருந்த போதும் 12 மாதங்கள் பூர்த்தியாகும் வரையில் அடிக்கடி தாயின் பைக்குள் குதித்துச் சிறிது இளைப்பாறிய பின்னர் வெளியே வரும் பழக்கத்தைக் கொண்டிருக்கும். அதற்குள் இருந்தவாறு தாயிடம் இருந்து பாலும் குடிக்கும்.

இந்த வயிற்றுக்கு அடிப்பாகத்தில் உள்ள தொங்கும் பைக்குள் 4 முலைக் காம்புகள் உள்ளன. அந்த நான்கு முலைக் காம்புகளில் இருந்தும் வெவ்வேறு விதமான போஷாக்குத் தன்மை பொதிந்த பால் குட்டிக்குக் கிடைக்கின்றது. அவை ஒவ்வொரு பருவத்திலும் குட்டியின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களை வழங்குகின்றன.



## கங்காரு இனங்கள் பல உண்டு


'ஈஸ்டர்ன் கிரே' (Eastern Gray) என்பது ஒரு இனமாகும். 'மெக்ரோபஸ் கிகான்டஸ்'

கொண்ட
முக்கும்
அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...மந்து தம் குட்டிகளைப்
# ...க்கும் கங்காருகள்





ர்

த

உண்டு

...என்பது, ஒரு
...ஸ்'

(Macropus Giganteus) என்ற விலங்கினத்தைச் சேர்ந்ததாகும். இவை 3-8 அடி வரை வளரக்கூடியன. 18-95 கிலோகிராம் வரை எடை உடையன. உலகில் வாழும் கங்காருக்களில் மிக எடை கூடியது இந்த இனமாகும். இதன் ஆண்,பெண்ணை விட எடை அதிகம் கொண்டதாகும். சாதாரண எடை 45 கி.கிராமுக்கும் உயர்வாகும்.

அவை எப்போதும் கூட்டமாக வாழ்வதையே விரும்புவதோடு காலை, மாலை நேரங்களிலே அதிகம் மேய்வதைப் பழக்கமாகக் கொண்டுள்ளன. அதற்கு இடைப்பட்ட நேரங்களில் மர நிழல்களில் படுத்து இளைப்பாறும் பழக்கத்தைக் கொண்டுள்ளன.

## சிவப்பு நிறக் கங்காரு

சிவப்பு நிறக் கங்காரு 'மக்ரோபஸ் ரபஸ்' (Macropus Rufus) என்ற இனத்தைச் சார்ந்ததாகும். இவை 3-9 அடி வரை உயரமானதாகவும், 18-70 கி.கிராம் வரை எடை கொண்டதாயும் தோற்றமளிக்கும்.

அவுஸ்திரேலியாவின் அண்மைய ஆய்வுகளின் படி கங்காரு இனம் பெருகி வருவது கண்டறியப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் மேய்ச்சல் நிலம் பெருகி வருவதும் இவற்றின் எதிரி மிருகங்கள் அழிந்து அருகி வருவதுமுமாகும்.



இந்தக் கங்காருகளின் ஊண் உண்ணும் முறையானது ஆடு, மாடுகளின் தன்மையை ஒத்திருக்கின்றது. ஆடு, மாடுகளைப் போல் அசை போடக் கூடியவைகளாகும். பகலில் கிடைப்பதை நன்கு மேய்ந்து கொண்டு, இரவில் அசை போட்டு, நன்கு மென்று விழுங்கும் ஆற்றலைப் பெற்றுள்ளன.

சிவப்பு வகைக் கங்காருகள் பரவலாக மாலை நேரத்தில் சூரியன் மறைவதற்குத் தயாராகும் போதே மேய்ச்சல் நிலத்திற்கு வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளன. சில நேரங்களில் இருள் ஆகும் வரை மேய்ந்து வயிற்றை நிரப்பிக் கொள்ளும்.

நீர் இருந்தால் தேவையான அளவு நீரைப் பருகுமாயினும் நீரை விட மேய்ச்சலுக்கே முன்னுரிமை கொடுக்கும்.

பகல் நேரத்தில் மேய்ச்சலை வழக்கமாகக் கொண்டிருக்கும். கங்காருகள் மேயும் போது காணப்படும் சிறு புழு, பூச்சிகளையும் சேர்த்து உண்ணுகின்றன. அந்த ஜீவிகள் மேய்ந்த தாவரத்தை இலகுவில் ஜீரணிக்கச் செய்வதால், அவ்வாறு செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளன.

ஏ.எச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆம் நூற்றாண்டில் ஆரம்பமான கிரிக்கெட்!

இன்று எவ்வித பேதமுமின்றி இலங்கையர்களின் உள்ளங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது கிரிக்கெட் விளையாட்டே. கிரிக்கெட் விளையாடுபவர்களின் தொகை சொற்பமானதாயினும் அதனை இரசிப்பவர்களினதும் அதனைப் பற்றிப் பேசி மகிழ்பவர்களினதும் எண்ணிக்கையோ அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

கிரிக்கெட் விளையாட்டின் தாயகம் இங்கிலாந்து ஆகும். மட்டையையும் பந்தையும் கொண்டு விளையாடும் விளையாட்டு 13 ஆம் நூற்றாண்டில் காணப்பட்டது. இவ்விளையாட்டுப் போட்டி 1300 ஆம் ஆண்டில் முதலாம் எட்வேர்ட் மன்னனின் கணக்கேடு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆரம்ப காலத்தில் கிரிக்கெட் கண்டனத்துக்குரிய ஒன்றாகவே கருதப்பட்டது. நான்காம் எட்வேர்ட் மன்னன் இவ்விளையாட்டைத் தடை செய்ததோடு அதனை விளையாடுவோர்க்கு அபராதத் தொகையோடு 2 வருடச் சிறைத் தண்டனையையும் விதித்தான். அத்தோடு அதனை விளையாட இடம் கொடுத்த நிலச் சொந்தக்காரர்களுக்கு 3 வருடச் சிறைத்தண்டனையையும் வழங்கினான்.




அக்காலத்தில் கிரிக்கெட் துடுப்பு (Bat), ஹொக்கித் தடி போன்று வளைந்து காணப்பட்டது. 18 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தான் தற்போதையதைப் போன்ற நேரான துடுப்புப் பயன்படுத்தலாயிற்று. அக்காலத்தில் நிலத்தில் 2 விக்கெட்டுகளேதை நடப்பட்டன. 1776 ஆம் ஆண்டில் தான் நடு விக்கட் நாட்டப்பட்டது. ஆடுகளத்தின் நீளம் மட்டுமே அன்று போல் இன்றும் மாறாமல் இருக்கிறது.

1745 இல் பெண்களுக்கான முதலாவது கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. எனினும் 1958 ஆம் ஆண்டில் தான் சர்வதேசப் பெண்கள் கிரிக்கெட் சபை நியூசிலாந்திலுள்ள கிரைஸ்சேர்ச் நகரில் அமைக்கப்பட்டது.

**எம்.ரீஸ்கான், தரம் - 08,**
**அல்மின்ஹாஜ் தே.பா,**
**ஹப்புகஸ்தலாவை.**

# ஈபிள் கோபுரம் எவ்வாறு உருவானது?



உலகின் மிகப் புகழ் வாய்ந்த ஒரு கட்டமைப்பாக ஈபிள் கோபுரம் (Eiffle Tower) விளங்குகின்றது. ஆங்கில A எழுத்து நீண்டுயர்ந்து நிற்பது போல் இந்த ஈபிள் கோபுரம் உயர்ந்து அசையாது நிற்கிறது. பிரான்சிய நாட்டின் ஒரு அடையாளமாகவும், பாரிஸ் நகரத்தின் ஒரு சின்னமாகவும் ஈபிள் கோபுரம் விளங்குகின்றது.

பிரான்சியப் புரட்சியின் நூற்றாண்டு நினைவுச் சின்னமொன்றை உருவாக்கப் பிரான்சிய அரசு ஆயத்தமானது. இதன்படி 300 மீற்றர்களுக்கு மேற்பட்ட இரும்பினாலான ஒரு மாபெரும் கோபுரமொன்றை நினைவுச் சின்னமாக அமைக்கப் பிரான்சிய அரசு விரும்பியது. அதற்காக ஒரு போட்டியையும் அறிவித்தது. இதற்கு 700 விற்பன்னர்கள் தமது திட்டப் படங்களைச் சமர்ப்பித்தனர். அவற்றில் குஸ்ராவ் ஈபிள் (Gustave Eiffle) என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட வடிவமைப்பு ஏகமனதாகத் தெரிவாகியது. அதுவே இந்த ஈபிள் கோபுரமாகும்:

ஈபிளுக்கு அப்போது வயது 53. அவர் சிறந்த ஒரு பொறியியலாளராக விளங்கினார். இக்கோபுரம் 300.65 மீற்றர் (986 அடி 4 அங்குலம்) உயரமானதாகும். உச்சியில் ஒரு ஒடுங்கிய மேடையும், அதில் மின்னற் கடத்தியும், கொடிக்கம்பமும் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோபுரத்தின் கடைசி ஆணியைப் பூட்டிக் கோபுர வேலையைப் பூர்த்தி செய்யும் நாளில் 50 பாரிஸ் நகர மக்களுக்குத் தன்னுடன் கோபுர உச்சிக்கு வருமாறு ஈபிள் அழைப்பு விடுத்திருந்தார்.

அந்த உயர்ந்த கோபுரத்தில் ஏறுகின்ற துணிவு அன்று அதிகம் பேருக்கு இருக்கவில்லை.

1889 மார்ச் மாதம் 30ம் திகதி இந்தக் கோபுரத்தின் பணிகள் பூர்த்தியடைந்தன.

**பாத்திமா ரிஸ்மியா ராஸிக், தரம் - 09$^{D}$,**
**அல்-மனார் மத்திய கல்லூரி,**
**ஹந்தெஸ்ஸ.**




# அழகழகாய் எழுது

குண்டு குண்டாய் எழுது.
கோணல் இன்றி எழுது.
கண்டு கண்டு மனது.
களிக்கும் வண்ணம் எழுது.
முத்து முத்தாய் எழுது.
முயற்சி செய்து எழுது.
பத்து வரிகள் தினமும்,
பயிற்சி செய்து எழுது.
நேர்த்தியாக எழுது.
நிறுத்தி நன்கு எழுது.
பார்த்தவர்கள் எளிதில்,
படிக்குமாறு எழுது.
ஆர்வம் கொண்டு எழுது.
அழித்தல் இன்றி எழுது.
தேர்வில் அதிகம் மதிப்பெண்,
திரட்ட அழகாய் எழுது

**எம்.ஏ.நஸ்ஹறா, தரம் - 07,**
**ப/அல்-யாசின் மு.வி,**
**பண்டாரவளை.**



# அழகிய மலையகம்

எங்கள் மலையகம்
எழில் பொங்கும் கலையகம்
தங்கத் தமிழ் பொழியும்
மங்காப் புகழ் நிலம்
சில்லென்று மோதுங்
காற்றில்
சிலிர்த்திடும் பனியும் சேர்ந்து
குளிரினால் உடல் நடுங்கி

கோதையின் கரங்கள்
நீண்டு
தேயிலைக்
கொழுந்துகளைச்
சேர்த்தெடுக்கும் விரல்
நளினம்
பார்த்தாலும் தெவிட்டாது
பாரினில் எந்நாளும்!

**எஸ்.சாந்தி, தரம் - 11, க/ஸ்ரீ வாணி த.வி, கண்டி.**



# ரோஜாப் பூ

மணம் வீசும் ரோஜாவே
நான் விரும்பும் ரோஜாவே
பட் என்று என் மனதில்
குடி கொண்ட ரோஜாவே
கம கம என்று மணக்கும்
ரோஜாவே
அந்த மனத்தின் மூலம்
என்னை மயக்க வைக்கும்
ரோஜாவே
மணம் வீசும் ரோஜாவே
நான் விரும்பும் ரோஜாவே!



**பாத்திமா ஆயிஷா, தரம் - 08$^{C}$,**
**பாத்திமா முஸ்லிம் ம.வி, கொழும்பு - 12.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க மறந்த மான்

ஓர் அடர்ந்த காட்டில் நரி ஒன்று வசித்து வந்தது. ஒரு நாள் இந்த நரிக்கு நன்றாகப் பசி எடுக்கவே, இரை தேடிக் காட்டில் நெடுந்தூரம் நடந்து திரிந்தது. இப்படி நடந்து திரிகையில், எதிர்பாராத விதமாகக் காட்டில் காணப்பட்ட ஆழமான குழியொன்றில் அந்த நரி தவறி விழுந்து விட்டது. குழியில் விழுந்த நரி எவ்வளவோ தட்டுத் தடுமாறிப் பார்த்தது. எவ்வளவு முயற்சித்துப் பார்த்தும் அதனால் குழியிலிருந்து வெளியே வரமுடியவில்லை. கடைசியில் மிகவும் களைப்புற்று அது ஓர் ஓரமாக அமர்ந்து விட்டது.

இ[illegible]ச் சந்தர்ப்பம் பார்த்து, அந்தப் பக்கமாக மானொன்று வந்தது. அப்போது அந்தக் குழியிலிருந்து ஊளையிடும் சத்தத்தைக் கேட்டு, என்ன குழியினுள் சத்தமாக உள்ளதே என மெதுவாக குழியினுள் எட்டிப் பார்த்தது. குழியினுள்ளே நரி விழுந்து கிடப்பதைக் கண்டு

"நரியாரே, நீ இங்கு என்ன செய்கிறீர்?" எனக் கேட்டது மான். அதற்கு அந்த நரி.....




தனது தந்திரத்தைப் பாவிக்க எண்ணியது. உடனே அது மானைப் பார்த்து-

"இந்தக் குழியினுள் என்ன உள்ளதெனப் பார்ப்பதற்குத் தான் இதனுள்ளே பாய்ந்தேன்..... அப்பப்பா... என்ன சுகம்... என்ன சுகம்.... இந்தக் குழியினுள் இருக்கும் போது குளிர்மையாகவும், சுகமாகவும், இதமாகவும் உள்ளது. நீயும் வேண்டுமென்றால் இங்கு வந்து பாரேன்" எனக் கூறியது.

நரி கூறுவதை ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தது அந்த மான். நரியைப் போலவே தானும் குழியினுள் இறங்கி அந்தச் சுகத்தை அனுபவித்தால் எப்படியிருக்கும் என அது எண்ணிக் கொண்டது. காடெங்கிலும் சுற்று முற்றும் பார்த்தது. வேறெந்த மிருகங்களையும் அங்கு காணவில்லை. நரி கூறியது போலவே.... மானும் அந்தக் குழியினுள் பாய்ந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட நரி, குழியில் விழுந்த மானின் முதுகில் காலை வைத்து ஏறிக் குழியிலிருந்து மேலே வந்துவிட்டது. மானோ செய்வதேதும் அறியாமல் தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்தது. "உள்ளே குளிரும், சுகமும் உள்ளதென நரி கூறியதே...... அப்படி எதையும் காணவில்லையே.... ஐயையோ ஏமாந்து விட்டோமே......!" என மான் அழுது கொண்டது.

அப்போது குழியின் மேலிருந்த நரி... மானைப் பார்த்து எக்காளமிட்டுச் சிரித்தது. "முட்டாள் மானே எனது பேச்சைக் கேட்டு வீணாகக் குழியில் விழுந்து விட்டாயே.... குழியில் குதிக்கச் சொன்னால் இப்படித்தான் சிந்திக்காமல் குதிப்பதா? சரி சரி..... முடியுமானால் தப்பித்து வந்துவிடு......" எனத் தனது போக்கில் சென்றுவிட்டது நரி. குழியில் கிடந்த மானோ நரியின் தந்திரத்திற்குப் பலியாகி விட்டோமே எனத் தன்னைத் தானே நொந்துக் கொண்டது.

இதனைத்தான் குதிப்பதற்கு முன் சிந்திக்க வேண்டும் என்று கூறுவார்கள். இன்னொரு வகையில் கூறினால், ஒன்றைச் செய்வதற்கு முன் இரண்டு முறை சிந்திக்க வேண்டும் என்றும் கூறுவதுண்டு. இதனை இந்த மான் பின்பற்றியிருந்தால் நரியின் தந்திர வலையில் வீழ்ந்திருக்காது. நமது நிஜ வாழ்க்கையில் கூட ஒன்றைப் பற்றி நன்றாகச் சிந்தித்த பிறகே செயலில் இறங்க வேண்டும்.

## விஜய் சந்தா விபரம்

**'விஜய்' பத்திரிகையினைக் கீழ்க்காணும் சந்தாத் தொகையினைச் செலுத்தித் தபாலிலும், நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.**

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ 269/= | ரூ 130/= |
| தபாலில் | ரூ 364/= | ரூ 182/= |

**பின்வரும் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள்**
**(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)**

பெயர்/Name ------------------------------------------------
முகவரி/Address ------------------------------------------------
தொ.பே.இல/T.P No: ------------------------------------------------
மின் அஞ்சல்/E-mail ------------------------------------------------

விண்ணப்பிப்பது : பாடசாலை/நிறுவனம்/வாசகர் (தேவையற்றதை வெட்டிவிடுங்கள்)
எமக்கு .................. மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்

--------------------  --------------------
கையொப்பம்  திகதி

உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ, காசோலை யாகவோ அனுப்பலாம். காசுக் கட்டளையை (MO) மாற்றும் தபால் கந்தோர்: **SLAVE ISLAND POST OFFICE** எனக் குறிப்பிட்டு, **CIRCULATION MANAGER, Wijeya News Papers Ltd, No-08, Hunupitiya Cross Road, Colombo 02** என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். காசோலை அனுப்புவோர் **Wijeya News Papers Ltd** என்ற பெயருக்கு எழுதவும்.

**மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல : 2314714 ext -523**
**Email: vijey@wijeya.lk**

## விஜய் மாணவர் கழகம்



எம்.ஆர்த்திகா,
தரம் - $08^{C}$,
கார்மேல் பாத்திமா கல்லூரி,
கல்முனை.
**அங்கத்துவ இல-313**



டி.ஹரீகாந்,
தரம் - $10^{A}$,
தமிழ் மகா வித்தியாலயம்,
இரத்தினபுரி.
**அங்கத்துவ இல-314**



ரா.தக்சஷ்லாந்த்,
தரம் - $10^{B}$,
ரணபிம றோயல் கல்லூரி,
கண்டி.
**அங்கத்துவ இல-315**



த.திவ்யதர்ஷினி,
தரம் - $08^{A}$,
மலைமகள் மத்திய
கல்லூரி, நெல்தோட்டை.
**அங்கத்துவ இல-316**



எஸ்.வினோத்குமார்,
தரம் - $05^{T}$,
நு/புனித சவேரியார்
கல்லூரி, நுவரெலியா.
**அங்கத்துவ இல-317**



எல்.சஞ்ஜே,
தரம் - $07^{C}$,
வெஸ்லி கல்லூரி,
கொழும்பு.
**அங்கத்துவ இல-318**



கோ.அபிசன்,
தரம் - $01^{A}$,
கிளி/இராமநாதபுரம் ம.வி,
கிளிநொச்சி.
**அங்கத்துவ இல - 319**



க.சகானா,
தரம் - $03^{C}$,
ஸ்ரீ சுப்ரமணிய வித்தி.
முல்லைத்தீவு.
**அங்கத்துவ இல-320**



சு.சுவர்ணலதா,
தரம் - 11,
பது/கலைமகள் த.வி,
ஹொப்டன்.
**அங்கத்துவ இல-321**



வை.பொன்சன்,
தரம் - $11^{C}$,
மன்/புனித சவேரியர்
ஆ.தே.பாடசாலை, மன்னார்.
**அங்கத்துவ இல-322**



ம.லகுமீகரன்,
தரம் - $09^{T}$,
வ/விபுலானந்தாக் கல்லூரி,
வவுனியா.
**அங்கத்துவ இல-323**



பி.பாத்திமா ரிஸ்னா,
தரம் 05,
கனிஷ்ட பாலிகா வி,
நாவலப்பிட்டி.
**அங்கத்துவ இல-324**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரனும் சந்திரமுகியும்

அத்தியாயம்-2 கோபன்

சந்திரன் மூக்கைச் சொறிந்தவாறே யோசித்தான். அவன் காற்சட்டைப் பையில் முதல் நாள் மிகுதியாக வைத்திருந்த காய்ந்த பாண்துண்டு ஒன்று இருந்தது. அவன் காட்டுக்குப் போகும் வழியில் பாண் துண்டைச் சிறுசிறு துண்டுகளாக்கிக் குறித்த இடைவெளியில் போட்டுக் கொண்டே சென்றான். காட்டுக்குள் அவர்கள் குறித்த இடத்தையடைந்தனர். அவர்களை அங்கே விட்டு விட்டு அவர்களது அப்பாவும், சித்தியும் காட்டுக்குள் சென்று மறைந்து விட்டனர்.

"சந்திரமுகி, பயப்படாதே! நான் வரும் வழியெல்லாம் பாண் துண்டுகளைப் போட்டு விட்டுத் தான் வந்தேன். நாம் இலகுவாக வழியைக் கண்டு பிடித்து வீடு போய்ச் சேர்ந்து விடலாம்"

அவர்கள் திரும்பிப் போவதற்காகப் பாண் துண்டுகளைத் தேடிச் சென்றார்கள். ஆனால் பாண் துண்டுகள் மாயமாய் மறைந்து போயிருந்தன. அவற்றைக் காணவில்லை. காட்டிலிருந்த பறவைகள் அவற்றைத் தின்றிருக்க வேண்டும்.

அவர்கள் அங்குமிங்கும் அலைந்து திரிந்து களைத்துப் போனார்கள். பசியில் வாடிய அவர்களுக்கு விரைவில் நித்திரை வந்து விட்டது.

அவள் வேலைகளைச் செய்து கொண்டே தீவிரமாகச் சிந்தித்தாள். அவள் மனது தனது அண்ணாவை எப்படியாவது காப்பாற்றி விடவேண்டுமென்று துடித்தது.

அடுத்த நாள் காலை விழித்தெழுந்ததும் சந்திரன் பாதையேதும் தென்படுகிறதா எனத் தேடிப் பார்த்தான். அப்போது புல் மண்டியிருந்த ஒரு பாதையைக் கண்டுபிடித்தான். பரவசமடைந்த அவன் தனது தங்கையை விரைந்து எழுப்பினான். அவர்கள் இருவரும் அப்பாதை வழியே நடந்து சென்றார்கள். சிறிது தூரம் நடந்து சென்றதும் மிக அழகிய ஒரு சிறு வீட்டைக் கண்டார்கள்.



அதிசயம் என்னவென்றால் அந்த வீடு முற்றிலும் கேக்காலும், சொக்கலட்டாலும் செய்யப்பட்டிருந்தது. பிள்ளைகள் இருவரும் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தார்கள். மிகுந்த பசியாக இருந்த அவர்கள், வீட்டின் ஒரு பகுதியைப் பிய்த்து உண்ணத் தொடங்கினார்கள்.

கேக்கையும், சொக்கலட்டையும் வாய் நிறையத் திணித்துக் கொண்ட சந்திரமுகி வீட்டின் முன்புறத்தைப் பிய்த்து தின்னப் போவதாகச் சந்திரனிடம் கூறிவிட்டு முன்னால் ஓடினாள். அப்போது அவள் அங்கே ஒரு மூதாட்டி இருப்பதை அவதானித்தாள்.

அந்த மூதாட்டி "வாருங்கள், பிள்ளைகளே! நீங்கள் பசியோடிருக்கிறீர்கள். வீட்டுக்குள் வாருங்கள். சாப்பிடத் தருகிறேன்" என்று அன்புடன் கூறினாள். அந்த மூதாட்டி அவர்கள் இருவரையும் அன்புடன் அரவணைத்து வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள். அவர்களுக்கு மிகச் சுவையான உணவுகளை உண்ணக் கொடுத்தாள். பிள்ளைகள் இருவரும் அடுத்த சில நாட்களுக்கு நன்கு உண்டு, குடித்து, உறங்கி மகிழ்ச்சியுடனிருந்தார்கள்.

ஒரு நாள் காலை எழுந்த போது சந்திரன் இல்லாதிருப்பதைச் சந்திரமுகி அவதானித்தாள். அவனை எங்கெல்லாம் தேடியும் காணவில்லை. இறுதியாக அவன் ஒரு கூட்டுக்குள் அடைபட்டு இருப்பதனைக் கண்டாள். அப்போது அவ்விடத்திற்கு வந்த அக்கிழவி பயங்கரமான தன் பற்களைக் காட்டி இழித்தபடி "நான் ஒரு மந்திரக்கிழவி, நான் உன்னையும் உன் அண்ணனையும் சாப்பிடப் போகிறேன். அதுவரை நீ கீழ்ப்படிவுடன் நான் சொல்லும் வேலைகளைச் செய்ய வேண்டும். இப்போது போய் தண்ணீர் எடுத்துக் கொண்டு வா" என்று சந்திரமுகியிடம் மந்திரக்கிழவி கூறினாள்.

நாட்கள் நகர்ந்து சென்றன. சந்திரன் நன்கு கொழுப்பதற்காக நல்ல உணவு வழங்கப்பட்டது. சந்திரமுகி பட்டினியுடன் கடுமையான வேலைகளைச் செய்ய வேண்டியிருந்தது. அவள் மிக மெலிந்து பலவீனமடைந்தாள். அவள் தன் அண்ணாவைப் பார்க்கக் கூட அனுமதிக்கப்படவில்லை.

ஒரு நாள் காலை சந்திரமுகியை மந்திரக்கிழவி திடீரெனத் தட்டியெழுப்பினாள். "குட்டிப் பிசாசே, சோம்பேறிக் கழுதை இன்னுமா நித்திரை? எழுந்து வீடெல்லாம் கழுவிச் சுத்தம் செய். நான் நிறையப் பொருட்கள் சமைக்க வேண்டும். இன்று உன் அண்ணாவைச் சாப்பிடப் போகிறேன்"

அன்று சந்திரமுகிக்குக் கடுமையான வேலைகள் கொடுக்கப்பட்டன. அவள் வேலைகளைச் செய்து கொண்டே தீவிரமாகச் சிந்தித்தாள். அவள் மனது தனது அண்ணாவை எப்படியாவது காப்பாற்றி விடவேண்டுமென்று துடித்தது. அவள் ஒரு திட்டம் தீட்டினாள். நேரம் மெதுமெதுவாகக் கழிந்து கொண்டிருந்தது.

சந்திரமுகி தன் தமையனைக் காப்பாற்ற ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தாள். நண்பகலில் மாயக்கிழவி தன் விருந்திற்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தாள். அடுப்பருகில் சென்று கட்டைகளை அடுக்கித் தீ மூட்டினாள். விரைவில் பெருந் தீ பற்றியெரிய ஆரம்பித்தது. பின்பு சந்திரமுகியைக் காட்டுக்குச் சென்று காய்களும், பழங்களும் பறித்து வரும்படி கட்டளையிட்டாள். சந்திரமுகி காட்டுக்குள் ஓடினாள். அவள் திரும்பி வந்தபோது மாயக்கிழவி தன் போறணை சூடடைந்து பாண் சுடுவதற்குத் தயாராக இருக்கிறதா? என்று எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்போது......

(தொடரும்......)

படத்தை இங்கே ஒட்டவும்



விஜய்
மாணவர் கழகம்
விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர் :....................................................
முகவரி :....................................................
....................................................
பாடசாலை : ....................................................
வகுப்பு : ....................................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்

அற்லஸ்




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்குச் சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாகச் சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

# வழக்கிற்காகப் பணத்தை இழந்த ஜெக்சன்



உலகப் புகழ் ஆங்கிலப் பாடகரான மைக்கல் ஜெக்சன் தன் மேல் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களிலிருந்து விடுதலை பெற்றுள்ளார்.

துர்நடத்தைச் சம்பவமொன்றில் குற்றஞ் சுமத்தப்பட்டே மைக்கல் ஜெக்சனுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

68 நாட்கள் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையின் போது இரண்டு தடவைகள் மைக்கல் ஜெக்சன் சுகவீனமுற்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்த வழக்கில் மைக்கல் ஜெக்சன் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டிருந்தால் அவருக்குக் குறைந்த பட்சம் 20 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கலாம். 46 வயதான ஜெக்சனுக்கு அது பாரிய தாக்கமாக அமைந்திருக்கவும் கூடும். இருப்பினும், அவர் இந்த வழக்கில் வெற்றியீட்டியுள்ள அதே வேளை தனது பணத்தில் கணிசமான அளவை மேற்படி வழக்கிற்கே செலவு செய்து முடித்து விட்டார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அவுஸ்திரேலியப் பணயக் கைதியை மீட்டெடுத்த ஈராக் இராணுவம்



ஈராக்கில் தீவிரவாதிகளினால் பணயக் கைதியாகப் பிடிக்கப்பட்டிருந்த அவுஸ்திரேலியப் பிரஜையான 'டக்ளஸ்வுட்' என்பவரை ஈராக்கிய இராணுவத்தினர் உயிருடன் மீட்டெடுத்துள்ளனர்.

ஈராக்கிய இராணுவத்திற்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றையடுத்துத் தேடுதல் பணியொன்றை மேற்கொண்ட இராணுவத்தினர், பக்தாத்தில் தீவிரவாதிகள் தங்கியிருந்த வீடொன்றை முற்றுகையிட்டபோதே அங்கு மேற்படி பணயக் கைதியும் இருக்கக் கண்டு பலத்த போராட்டத்தின் பின்னரே அவரை உயிருடன் மீட்டெடுத்தனர். 63 வயதையுடைய பொறியியலாளரான "வுட்" கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதியே பணயக் கைதியாகப் பிடிக்கப்பட்டார்.

ஈராக்கிலுள்ள அவுஸ்திரேலிய இராணுவத்தினரை உடனடியாக அங்கிருந்து வாபஸ் பெறுமாறு கோரியே 'வுட்' பணயக் கைதியாகத் தீவரவாதிகளால் பிடிக்கப்பட்டார். எனினும், பின்னர் அவர்கள் பெருந்தொகைப் பணத்தைத் தருமாறு கோரிக்கையொன்றை முன் வைத்தனர். எதற்குமே அவுஸ்திரேலிய அரசாங்கம் மசியவில்லை. 'வுட்'டின் அதிர்ஷ்டம், ஈராக்கியப் படையினரின் அதிரடி நடவடிக்கையால் அவர் காப்பற்றப்பட்டார்.

# வெற்றிகரமான சிகிச்சை





சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் பேரு நாட்டில் கடற்கன்னியை ஒத்த வடிவில் பிறந்த குழந்தை பற்றிய செய்தியொன்று பரபரப்பாகப் பேசப்பட்டது. கால்கள் இரண்டும் ஒட்டிய நிலையில் பிறந்திருந்ததன் காரணமாகவே இக்குழந்தை கடற்கன்னிக் குழந்தை எனப் பேசப்பட்டது. இருப்பினும் குழந்தை பிறந்து 13 மாதங்களின் பின்னர் பேருவைச் சேர்ந்த மருத்துவர் குழுவொன்று மேற்கொண்ட வெற்றிகரமான சத்திர சிகிச்சையின் காரணமாகக் குழந்தையின் இரண்டு கால்களும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டு விட்டன. இப்போது இந்தக் குழந்தையின் இரண்டு கால்களும் சராசரி மனிதர்களைப் போலவே உள்ளன. மேற்படி சத்திர சிகிச்சைக் குழுவில் 11 மருத்துவர்கள் ஈடுபட்டிருந்தனர். தற்போது குழந்தை ஆரோக்கியமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## அற்லஸ் கேள்வி - 17

**கேள்வி**

எந்த நாட்டில் கடற்கன்னியைப் போன்ற குழந்தை பிறந்தது?

சரியான விடை :................................

உங்கள் விடையுடன்– பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தலட்டையில் மாத்திரம் எழுதிஅனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம்,
கேள்வி - 16,
விஜய்,
த.பெ.எண் 2037, கொழும்பு.


## போட்டி இல - 15 இன் சரியான விடை :- விளாடிமிர் புட்டின்

என்.பி.ஷியாம், தரம் - 10,
அல்-ஹிலால் ஆண்கள் ம.வி,
அக்கரைச்சேனை,
மூதூர்.

ஆர்.ஜெயந்தகுமார், தரம் - 11G,
இந்துக் கல்லூரி,
கொழும்பு - 04.

ஏ.எப்.சுஹைறனா, தரம் - 07,
அல்-மின்-ஹாஜ் தே.பாடசாலை,
ஹபுகஸ்தலாவை,
நாவலப்பிட்டி.

# சீனாவில் வெள்ளத்தில் மூழ்கி 88 மாணவர்கள் மரணம்



சீனாவின் ஹீலொங்ஜியெங் என்ற பிராந்தியத்திலுள்ள பாடசாலையொன்று வெள்ளத்தில் மூழ்கியதில் 200 பேர் மரணமாகினர்.

சீன அரசாங்கத்தின் அறிவித்தலின்படி இந்த வெள்ள அனர்த்தத்தில் இறந்தோரில் 88 பேர் பாடசாலை மாணவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து வெள்ள நிவாரண நடவடிக்கைகள் ஒழுங்காக நடைபெறவில்லை எனக் கூறி அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

இன்னும் சில கிராமங்களில் தமது பிள்ளைகளின் சடலங்களைக் கண்டெடுத்த பின்னர் தான் நிவாரண உதவிகள் வந்து சேர்ந்ததாகவும் மக்கள் குறைபட்டுக் கொண்டனர். சீனாவில் வருடாந்தம் இவ்வாறு வெள்ள அனர்த்தம் நிகழ்ந்தே வருகின்றது. எனினும், அவற்றிற்கான எந்தவொரு உருப்படியான முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய வனம்



எழுதுபவர்:
கலையமுதன் இக்பால்

## அத்தியாயம் - 01

வட-கிழக்குப் பிராந்தியத்தின் மைய எல்லையில் தென் புறமாக அமைந்துள்ள அமைதி மிகும் அழகிய கிராமம் மாவிலங்கேணி. இச்சிற்றூரின் இடது புறத்தே மருதை நிலமும், வலது புறத்திலே முல்லை வனமும், கொல்லைப் புறத்திலே இந்து மா சமுத்திரம், வங்கப் பெருங்கடலுடன் ஒண்டறக் கலந்து ஆனந்த பைரவி பாடும் நெய்தல் நிலமுமாய், பரந்து விரிந்து கண்களுக்கும் நெஞ்சுக்கும் வியப்பூட்டி விருந்து படைக்கின்றன.

தாமரைக்குளம், தேனுடையான், கட்டைக்காடு, கண்டல், நாவற்குளி, நெடுவரப்பு, மானயங்குளம், கிழவனார்கட்டு, ஆத்திக்குளி, குமரிமுனை, அகத்திக்குளம், வண்ணாமோட்டை, பாலைக்குழி, வட்டக்கண்டல், முள்ளிக்குளம், விளாங்குடி, நாயாறு, மருதமடு, தேத்தாச்சோலை, புலியாகுளம், மணற்பிட்டி, உடையான்கேணி, கோவாலிகட்டு, சாடிமோட்டை, பள்ளமடு, பெரியமடு, குருந்தன் குளம், இலுப்பைக்கடவை, கள்ளயடி, முளங்காவில் போன்று இன்னும் பல குக்கிரமங்களுக்கு இராஜதானியும் தலைப்பட்டினமாகவும், திகழ்வது இந்த மாவிலங்கேணி தான்.

இந்த இனிய கிராமங்களினூடே மான் மரைகள் துள்ளியோடும், முயல்கள் குதித்துப் பாயும், குரங்குகள் தத்தித்தாவும், யானைகள் நடைபயிலும்,. மந்திகள் ராட்டினமாடும், மயில்கள் தோகை விரித்தாடும், குயில்கள் கூவும், கிளிகள் புதுமொழி பேசும், புள்ளினங்கள் சப்த ஸ்வரங்கள் இசைக்கும், கொக்குகள் விமானமோட்டும், சில்வண்டுகள் ரீங்காரமிடும், வண்ணத்துப்பூச்சிகள் வானவில்லின் வர்ணஜாலத்திலே ஆகாயப்பந்தல் போடும், காணுமிடமெல்லாம் மலர்களின் கண்காட்சி நெஞ்சைத் தொடும்.

இத்தகைய ஆனந்த மயக்கத்தினூடே தென்றல் காற்றிலே மேனி சுகம் சிலிர்க்க, சலசலத்தோடும் அருவிகள் பாடும் ஜலதரங்கம் சிந்தனைக்குச் சாமரம் வீச, அவற்றினூடே துள்ளித் திரியும் கயல், விரால், விலாங்கு மீன்களை விருந்துண்ண ஒற்றைக்காலிலே தவம் காக்கும். கொக்குகள் கப்பலோட்டும் தாராக்களின் கொள்ளை அழகு, இப்படியே அடுக்கிக் கொண்டு போனால் எழில் கொஞ்சும் கிராமத்தின் சிறப்பைச் சொல்லிமாளாது போங்கள். முடிந்தால் ஒருமுறை வந்துதான் பாருங்களேன்!

தாமரைக் குளத்தினூடே கொஞ்சிக்குலாவும் அன்றிலும் பேடுமான அன்னப் பறவைகள். சிவப்பு, வெள்ளைத் தாமரைப் பூக்களிடையே ஒளிந்து விளையாடும் அழகு, அல்லியும், ஒல்லியும், நீலோற்பலமும் காற்றிலே வரும் நீரசையின் ஓசைக்கேற்பத் தலையசைத்துச் சந்திர நிலவை ரசிக்க அதைக் காணும் நமக்கெல்லாம் அகமும், முகமும் மலரும். துள்ளாத மனமும் துள்ளும். இன்னும் இக்கிராமங்களில் முக்கனி, முச்சாறு, மும்மலர்கள் பரவி விரவிக் கிடக்கின்றன. மா, பலா, வாழை, ரோஜா, மல்லிகை, செம்பருத்தை, பால், தேன், இளநீர் இவற்றுடன் காட்டிலே காய்த்துக் குலுங்கிப் பழுத்துக் குவிந்து கிடக்கும் கனிவர்க்கங்கள் கணக்கற்றவை.

மர அப்பிள் எனப்படும் விளாங்கனி, மரத்திராட்சை எனப்படும் இலந்தைப் பழம், தின்னத் தின்னத் தெவிட்டாத பாலைப்பழம், அச்சம்பழம், ஈச்சை, உதவி, நாவல், கறுக்காப்பழங்கள், ஒட்டிப்பழம், சாயம் பழம், மூக்குத்திப் பழம், தூரிஞ்சிப்பழம், கொவ்வை, நாகதாளி எனச் சொல்லச் சொல்ல நாவிலே எச்சூறும் பழங்களுடன் முஷ்டை, சிறுகீரை, குறிஞ்சா, தடிச்சான் கீரை மற்றும் தும்பை, ஒட்டிக் கிழங்கு போன்ற மரக்கறிகளும் மலிந்து நிறைந்து, தேடுவாரற்றுக் கிடக்கின்றன.

இதே போன்றே கிராமத்துத் தோட்டங்கள், வயல்வெளி வரம்புகள், தரிசு நிலங்கள் எல்லாவற்றிலுமே விளைந்து கிடக்கும். பசுமை குன்றாத இலை வகை பசளி, பொன்னாங்கனி, அகத்தி, தகரை, தோட்டக்கீரை மற்றும் சுரைக்காய், பூசனிக்காய், அகத்தி, முருங்கை, கத்தரி, வெண்டி, வாழை, புடலை, கெக்கரி, வத்தலை, புட்டுப்பழம், பப்பாசிப்பழம், மரவள்ளி, சட்டிக்கரணை, இராசவள்ளிக்கிழங்கு வகைகள் இன்னும் பனை தரும் நுங்கு, பனம்பழம், பனங்கிழங்கு, ஒடியல் இவற்றுடன் எள்ளு, பயறு, குரக்கன், சோளம், இறுங்கு, சாமை, நிலக்கடலை போன்ற நவதானியங்களும், தவிடு நீக்காத கைக்குத்தரிசிச் சோறு, கோழிமுட்டை, பால், மோர், தயிர், வெண்ணெய், நெய், தேன், நல்லெண்ணெய், இலுப்பெண்ணைய், என்று சத்துணவுப் பொருட்களும் குளத்து மீன்களான பொட்டியன், செத்தல், யப்பான், பனையேறி போன்ற ருசியான மீன்களும் இயற்கைச் செல்வங்களாகக் கும்பிக் கிடக்கின்றன.

இத்தகைய சகல இயற்கை வசதி வாய்ப்புகளுடனும் கூடிய அந்த மாவிலங்கேணிக் கிராமத்திலே அறிவுக்குத் தீனி போடவும் ஒரு கலவன் பாடசாலையும் இயங்கி வருகின்றது. அதன் முற்றத்திலே நூறு வயதைத் தாண்டிய விழுது விட்டுக் கிளை பரப்பி வியாபித்த ஆலமரமொன்றும் நிற்கின்றது. பாடசாலை தொடங்கியதிலிருந்து முடியும் வரை யாராவது ஓரிரு பிள்ளைகள் ஆலம் விழுதுகளிலே ஊஞ்சலாடிக் கொண்டே யிருப்பர்.

# ஓர் ஊரிலே ஓர் அழகிய கிராமமிருந்ததாம்



> பாடசாலையின் முற்றத்தில் நூறு வயதைத் தாண்டிய ஆலமரம். அதன் நெடிதுயர்ந்த விழுதுகளில் பாடசாலை தொடக்கம் முதல் முடியும் வரை யாராவது ஓரிரு பிள்ளைகள் ஊஞ்சலாடிக் கொண்டே இருப்பார்கள்

ஐந்தாம் வகுப்பு வரையுள்ள அக்கனிஷ்டப் பாடசாலையிலே எல்லாச் சமூகங்களையும் சேர்ந்த சுமார் எண்பது பிள்ளைகள் வரை கல்வி கற்கின்றனர். தலைமை ஆசிரியர் உட்பட நான்கு ரீச்சர்கள் உள்ளனர்.

காலை வந்தனம் முடிந்ததும் பிள்ளைகளிற் சிலர் குருபணி செய்ய, ஆசிரியர்களின் வீடுகளுக்குச் சென்று விடுவர். அங்கே பானை சட்டி கழுவுதல், முன் கடையிலே போய் மீன், இறைச்சி வாங்கி வருதல், மாட்டுத் தொழுவம், ஆட்டுப்பட்டி, கோழிக்கூடு சுத்தம் செய்தல், வீடு கூட்டுதல், முற்றம் பெருக்குதல், தோட்டத்திலிருந்து வரும் காய்கறி, பழவகைகளை வேறுவேறாகப் பிரித்தல், அழுகிய பொருட்களைக் கழித்தல், இப்படியே கணிதப்பாடச் செயல்முறைப் பயிற்சியை முடித்துக் கொண்டு மீண்டும் பாடசாலை வர அங்கே 'கவ்பீ' உருண்டையும், தண்ணீர் கலந்து காய்ச்சிய பாலும் சத்துணவுகளாத் தயாராயிருக்கும்.

அவை பசியாற்றியதும் ஐந்து, பத்து நிமிடங்கள் வரை 'நிலா நிலா ஓடி வா, நில்லாமல் ஓடி வா' மற்றும் 'வட்ட வட்டப் பூக்கள்', எனத் தமிழ்ப் பாடம் முடிய அதே கதியிலே 'ருவிங்கிள் ருவிங்கிள் லிற்றில் ஸ்டார்' என ஆங்கிலப் பாடக் கோஷ்டி கானம் ஆரம்பமாகும்.

காலை நேரத்தை மணிக்கூட்டைப் பார்த்துத்தான் அறிய வேண்டும் என்பதல்ல. தலைமை ஆசிரியர் பாடசாலைக் கட்டிடம் நிழல் சாயும் இடத்தை வைத்தே துல்லியமாகச் சொல்லி விடுவார். காலை மணி பத்தரையென்றால், சேர் முற்றத்திலே நின்று ஒரு தரம் கை தட்டுவார். அப்போது வகுப் பறைகளிலிருந்து தேவாரம், சலவாத்து, ஸ்தோத்திரம் என்பன யாவும் ஒன்று கலந்து கோஷ்டி கானமாக ஒலிக்கப் பாடசாலை முடிந்து விடும். இப்படிப் பட்ட பாடசாலையில்........

(தொடரும்.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உச்சரிப்பை அறிந்து கொள்ள வேண்டிய சிங்களச் சொற்கள்

| சொற்கள் | உச்சரிப்பு | பொருள் |
|---|---|---|
| උදැල්ල | උදැල්ල<br>உ தැல்ல.<br>Thai = දැ<br>උදැල්ල | மண்வெட்டி |
| වැඩට | වැඩට<br>வැ டට<br>Vanilla = වැ<br>பட்டம் = ට<br>වැඩට | வேலைக்கு |
| කුඹුරු | කුඹුරු<br>குபுறு<br>Book = බු<br>කුඹුරු | வயல் |
| උදළු | උදළු<br>உ தளு<br>The = ද<br>උදළු | மண்வெட்டிகள் |
| වැඩ | වැඩ<br>வැ ட<br>Vanilla = වැ<br>වැඩ | வேலை |
| ඇතිවෙනවා | ඇතිවෙනවා<br>ඇதிவெனவா<br>At = ඇ<br>புத்தி = ති<br>ඇතිවෙනවා. | உண்டாகிறது |
| ඇඟට | ඇඟට<br>ඇඟට<br>At = ඇ<br>Gum = ග<br>பட்டம் = ට<br>ඇඟට | உடலுக்கு |
| ගුණයි | ගුණයි<br>குணயி<br>Good = ගු<br>ගුණයි. | நன்று |







**උදැල්ල உ දැල்ල - மண்வெட்டி பற்றிய ஓர் உரையாடல்**

උදැල්ල අපට බොහෝ ප්‍රයෝජනය.
உ දැல்ல அபට බොஹோ பிரயோஜனய
மண்வெட்டி எமக்கு மிகவும் பிரயோசனமானது.

කුඹුරු වැඩට උදැල්ල උපකාර වෙනවා.
குபுறு வැடට உ දැல்ல உபகாரவெனவா
வயல் வேலைகளுக்கு மண்வெட்டி மிக உதவியாக இருக்கும்.

උදළු වැඩ කිරීමෙන් ශරීර ශක්තිය ඇතිවෙනවා.
உ தளு வැட கிரீமென் ஸறீற ஸக்திய ඇதிவெனவா
மண்வெட்டியால் வேலை செய்யும் போது உடல் சக்தி பெறுகின்றது

දිනපතා උදැල්ලෙන් වැඩ කරමු.
தினபதா உ දැ ல்லென் வැட கறமு
நாள் தோறும் மண்வெட்டியால் வேலை செய்வோம்.
උදළු වැඩ ඇඟට ගුණයි.
உ தளு வැட ඇඟට குணயි.
மண்வெட்டி வேலை உடலுக்கு உகந்தது.




**வாசிப்பு - කියවීම**

உ - උ

| | පින්තූර | |
|---|---|---|
| උ | උදැල්ල | උණ |

උදැල්ල උණ

උදැල්ල උණ

| | | | |
|---|---|---|---|
| උ | දැ | ල් | ල |
| உ | දැ | ல் | ல |

| | |
|---|---|
| උ | ණ |
| உ | ண |

- උදැල්ල අපට බොහෝ ප්‍රයෝජනය.
  உ දැல்ல அபට බොஹோ பிரயோஜனய
- නංගිට උණ.
  நாங்கிட உண

**අභ්‍යාසය - பயிற்சி**

உ + ம் දැල්ල
උදැල්ල

**1. கீறிட்ட இடங்களை நிரப்புங்கள்**

i. උදැ ____ ල
ii. උ ____ ල්ල
iii. උදැල් ____
iv. උ ____
v. ____ ණ
vi. உ දැல்ல அபட බොஹோ ____
vii. நாங்கிட ____



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுக் களம்

Sports

தயாரிப்பு: வீ.ரெட்லி ஹெரீசன்




இங்கிலாந்தில் நடைபெறுகின்ற முக்கோண கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய-பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான போட்டியொன்றில் அவுஸ்திரேலியாவை அதிர்ச்சித் தோல்விக்கு பங்களாதேஷ் அணி ஆளாக்கியமை நாம் அறிந்ததே. மேற்படி போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வீரர் ரீக்கி பொன்டிங்கை ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்கச் செய்த பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சாளர் டபாஷ் பய்ஸியாவை அணி வீரர்கள் பாராட்டுவதைப் படத்தில் காணலாம்.

## இலங்கை வரும் மே.இ.தீவுகள் அணியில் 13 வீரர்கள் மட்டுமே இடம்பெறுவர்

இம்மாதம் (ஜுலை) இலங்கைக்கு வருகின்ற மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியில், பதின்மூன்று வீரர்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளதையிட்டு இலங்கையிலுள்ள கிரிக்கெட் விமர்சகர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இது குறித்து இலங்கையின் இடைக்காலக் கிரிக்கெட் சபையின் அதிகாரிகளிடம் கருத்துக் கேட்டபோது, "மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் குறைந்தளவு வீரர்களுடன் வருவது வசதியானதே. ஏனென்றால் அவர்களின் "ஏ" அணியினரும் ஏற்கனவே தற்போது இலங்கையில் போட்டிகளில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, பிரதான அணியில் 13 வீரர்களே இடம் பெற்றிருந்தாலும், அவர்களுக்கு அவசரமாக வேறு வீரர்கள் தேவைப்பட்டால் "ஏ" அணியிலுள்ள வீரர்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் அல்லவா?" எனத் தெரிவித்துள்ளார்.

ஆயினும், "பொதுவாக எந்தவொரு டெஸ்ட் அணியிலும் 15 வீரர்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதுதான் நியதியாகும். இதுவே சம்பிரதாயமாகவும் இருந்து வருகின்றது. இதற்குக் குறைவான எண்ணிக்கையில் வீரர்கள் தெரிவு செய்யப்படுவதானது சர்வதேசக் கிரிக்கெட் சபையின் சட்டதிட்டங்களுக்கு முரணானதாகும்'' எனக் கிரிக்கெட் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுவதும் கவனிக்கத்தக்க விடயமே.

இவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் இவ்வாறு நடந்து கொள்வதானது இலங்கைக்கு மற்றுமொரு வகையிலும் பாதிப்பானதாகும். அதாவது ஒரே சமகாலத்தில் மேற்கிந்தியத் தீவுகளின் டெஸ்ட் அணியும், "ஏ" அணியும் இலங்கையில் உள்ள நிலையில், டெஸ்ட் அணிக்கு வேண்டிய அளவில் "ஏ" அணியிலுள்ள வீரர்களைப் பயன்படுத்த வழிவகை கிடைத்துள்ளமையின் மூலம் அது [illegible]ங்கை அணியுடனான சமபலத்திற்குப் பெரும் அநீதியாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இரும்பு மனிதன் மைக் டைசனின் ஓய்வு



குத்துச் சண்டை உலகின் இரும்பு மனிதன் என வர்ணிக்கப்பட்ட மைக் டைசன் தான் குத்துச்சண்டைக் களத்திலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளமையானது அவரது ரசிகர்களுக்குப் பெரும் ஏமாற்றமாகவே அமைந்துள்ளது.

"தோல்வியைத் தழுவியுள்ள நிலையில் இனியும் தொடர்ந்து குத்துச் சண்டையில் ஈடுபடுவதானது நான் நேசிக்கின்ற குத்துச் சண்டையையே அவமதிப்பதாகி விடும்" என மைக் டைசன் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

2 தடவைகள் அதிபாரக் குத்துச் சண்டைக் கிண்ணத்தை வெற்றிக் கொண்டிருந்த மைக் டைசனின் வெற்றிக் கிரீடமானது கடந்த ஜூன் 11 ஆம் திகதியுடன் கீழிறக்கப்பட்டு விட்டதென்றே கூறலாம்.

அன்றைய தினம், அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் நடைபெற்ற போட்டியில், குத்துச் சண்டைக்குப் புதியவரான அயர்லாந்தைச் சேர்ந்த கெவின் மெக்பிரயிட் என்பவரை எதிர்த்தே மைக் டைசன் போட்டியிட்டார். ஆரம்பக் கட்டத்தில் தனது வழக்கமான பாணிகளில் கெவினுக்குச் சில குத்துக்களை விட்டார்.

எனினும், கெவினோ சமயோசிதமாகத் தற்காப்பு முறையில் விளையாடினார். சிறிது நேரத்தில் மைக் டைசன் தலையால் தாக்கியதில் கெவினுக்கு முகத்தில் காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்தது. இருப்பினும் அவர் சளைக்காமல் தொடர்ந்தும் மோதியதால், மைக் டைசன் நன்றாகவே களைப்படைந்து விட்டார். 6வது சுற்றில் கெவினின் தாக்குலுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் டைசன் வளையத்திற்குள்ளேயே சுருண்டு விழுந்தார். இதனையடுத்தே தனது 20 வருடகாலக் குத்துச்சண்டையிலிருந்து ஓய்வு பெறுவதாக டைசன் அறிவித்தார்.

ஒரு காலத்தில் இதே போன்றதோர் குத்துச்சண்டைப் போட்டியின் போது அதிபாரக் குத்துச் சண்டை வீரரான இவான்டர் ஹொலிபீல்ட்டின் காதினை மைக் டைசன் கடித்தமையால் அவருக்கு நீண்ட காலப் போட்டித் தடை விதிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மைக் டைசனின் வயது - 38, அவரைத் தோற்கடித்த கெவினின் வயது - 32. உடல் எடையில் மைக் டைசனை விடக் கெவினின் எடை 38 இறாத்தல் அதிகம் என்பதும் சுட்டிக்காட்டப்படத்தக்கது.

இப்போட்டியில் வெற்றியீட்டிய கெவின் மெக்பிரயிட்டுக்கு 1,50,000 அமெரிக்க டொலர் பணப்பரிசு வழங்கப்பட்ட அதே வேளை போட்டியில் கலந்து கொண்டமைக்காக 50 இலட்சம் அமெரிக்க டொலர் மைக் டைசனுக்கு வழங்கப்பட்டது. அவரைக் கௌரவிக்கும் முகமாகவே இத்தகைய பெருந்தொகை வழங்கப்பட்டதாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








கொழும்பு மஹாவத்தை புனித அந்தோனியார் தமிழ் வித்தியாலயத்தின் பாடசாலை தினம் கடந்த ஜுன் மாதம் 16 ஆம் திகதியன்று பாடசாலையின் அதிபர் அருட் சகோதரி பவளராணி அவர்கள் தலைமையில் இடம்பெற்றபோது, அருட்தந்தை ஜெரால்ட் ரொசாய்ரோ அடிகளாரால் திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் அந்தோனியார் திருச் சொரூப ஆசீர் வாதம் வழங்கப்படுவதையும், திருப்பலிப் பூசையில் கலந்து கொண்ட மாணவர்களையும், நிகழ்வின் இறுதியில் தேசிய கீதம் இசைப்பதையும் படங்களில் காணலாம்.

'விழா உலா'
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு



சி.ரபீந்திரநாத், தரம் 02,
பரமேஸ்வரா த.வி,
மருதங்கலை.



வீ.மேரி விக்னேஸ்வரி,
தரம் - 11,
யா/புனித ஜேம்ஸ் ம.பா,
யாழ்ப்பாணம்.



எ.ப்.சிபானா, தரம் - $04^{A}$,
குரிவெல ஹமீதியா கல்லூரி,
உக்குவெல.



ஆ.நிரோஜன், தரம் - $07^{B}$,
புதுக்குடியிருப்பு ம.க,
முல்லைத்தீவு.




'கைவண்ணங்கள்'
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு

## இசைப்பாடல்


# யானைத் தாத்தா

ஆடி அசைந்து வருகிறார்
ஆனை அப்பு வருகிறார்
காடு அதிரக் கத்திக் கொண்டு
கட்டைச் சாமி வருகிறார்

கம்பை உரித்துத் தின்னுறார்
காலால் உதைத்துத் தள்ளுறார்
கரும்பை முறித்துச் சப்புறார்
கனதிச் சாணம் போடுறார்

வயலை நாசம் செய்கிறார்
வாய்க்கால் நீரைக் குடிக்கிறார்
சேற்றை அள்ளி வீசியே
சேஷ்டை பல செய்கிறார்

தூணைப் போன்ற காலையே
தூக்கித் தூக்கி நடக்கின்றார்
சுளகுக் காதை ஆட்டியே
தும்பிக்கை உயர்த்தி ஆடுறார்.



கலை அமுதன் எம்.ஸீ.எம்.இக்பால்



சி.விபூசணன், தரம் - 08,
அசோகா வி,
கண்டி.




எம்.அர்ஷாட்,
தரம் $09^{A}$,
தெழும்புகஹவத்த மு.ம.வி,
அக்குறணை.



எ.ப்.ஹஸீனா, தரம் - 06,
அல்-அமீன் ம.க,
எலபொடகம.



பு.ரிஷிசாருகன்,
தரம் - $03^{E}$,
இறம்பைக்குளம் ம.ம.வி,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிழைகளைத் திருத்தி எழுதுக 1

1. சுதந்திர தின விழாவில் முப்படையினரின் அனிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றன.

..................................................................................................

2. உள்ளதை உள்ளவாறும் உணர்ந்தவாரும் கூறுவதே ஒரு கவிஞ்ஞுனுக்கு அழகு.

..................................................................................................

3. இராப்பொழுதில் வானில் தோன்றி பூமிக்கு ஒலியைப் பரப்பிக் கொண்டிருந்த சூரியனை மேகக்கூட்டங்கள் மறைந்தது.

..................................................................................................

4. கற்றது உலகளவு கல்லாதது கையலவு.

..................................................................................................




1,2,3,4, என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளைத் தபாலுறையிலிட்டு முகவரிக் கூப்பனை வெட்டி ஒட்டி மாணவர் பெயர், வகுப்பு, பாடசாலை, பாடசாலை முகவரி, நிரந்தர முகவரி, அருகில் உள்ள நகரம், மாவட்டம் முதலான விபரங்களுடன் தபாலில் அனுப்பவும். ஒவ்வொரு பகுதியில் இருந்தும் தெரிவு செய்யப்படும் ஓர் அதிர்ஷ்டசாலிக்குச் சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்)தலா ரூ.150/= பெறுமதியான பண வவுச்சர்களைக் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கும்.

**முகவரிக் கூப்பன்**

அற்லஸ் அறிவுக்கு விருந்து 21
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு

## வித்தியாசங்களை இனங்காண்க



## கணக்குப் புதிர்

அ. 5, ........, 13, 17

ஆ. 10, ........, 10, ........, 10

இ. ........, 12, 18, ........, 30

ஈ. ........, ........, 5, ........, 9, 11

* கீழே இருப்பது கூட்டல் கணக்காகும். இதில் 6 இலக்கங்களை நீக்கி விட்டு மீதியுள்ள இலக்கங்களைக் கூட்டினால் விடை 20 வர வேண்டும்.

111, 777, 999 **3**

## பொருத்தமான படங்களை வெட்டி எடுத்துப் பழக்கூடையில் ஒட்டுங்கள்.



### அற்லஸ் அறிவுக்கு விருந்து - 18 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

போட்டி : 01
ராஜினி ஆனந்தசங்கர்,
தரம் - 10A,
தமிழ் ம.வி,
ஏறாவூர்.

போட்டி : 02
எம்.நுஸ்ரத் அலி,
தரம் - 07B,
அல்-அதான் ம.வி,
பதுளை.

போட்டி : 03
கே.நிரோஜன்,
தரம் - 07D,
புனித மிக்கேல் கல்லூரி,
மட்டக்களப்பு.

போட்டி : 04
எம்.ஏ.எம்.றிபாஸ்,
தரம் - 05,
அநு/தாருஸ்ஸலாம் மு.வி,
அளுத்கம, அநுராதபுரம்.

## குறுக்கெழுத்துப் போட்டி, இல. 32

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | ம் | ■ |
| | ■ | ■ | | ■ | 3 |
| 4 | 5 | 6 க | | ■ | |
| 7 | | | | 8 | |
| 9 | | | ■ | | ■ |
| ■ | 10 தி | | | ரி | |

**5** அற்லஸ் வழங்கும் 5 ஆம் இலக்கத்திற்குரிய பரிசினை, இக் குறுக்கெழுத்துப் போட்டியை நிரப்பி வெற்றி கொள்ளுங்கள்.

**மேலிருந்து கீழ்**

1. சிவப்பு நிறப் பாசித்தாவரங்கள் இந்தக் கடலுக்கடியில் செறிந்து வளர்ந்துள்ளதனால் இக்கடல் நீர் சிவப்பாகக் காட்சியளிக்கின்றது.
2. மேற்கிலிருந்து வீசும் வறண்ட காற்று.
3. 'டினார்' எனும் நாணய அலகு இந்த நாட்டில் பாவிக்கப்படுகிறது.
5. தகவல் அல்லது செய்தி.
6. அரச நிர்வாகத்திற்குட்பட்ட பொது நிறுவனத்தை இப்படியும் அழைப்பர் (குழம்பி)
8. எட்வேர்ட் ஜெனர் என்பவர் இந்நோய்க்குரிய தடுப்பூசியைக் கண்டுபிடித்தார்

**இடமிருந்து வலம்**

1. வாசனை மிக்க பூப் பூக்கும் ஒருவகை மரம். இதே பெயரில் ஒரு பறவையினமும் உள்ளது.
4. பொபி மலரின் விதை.
7. ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டு வெள்ளிப் பதக்கம் வென்ற முதல் இலங்கை வீரர்.
9. பண்டைக் காலத்தில் அரசர்களும் வீரர்களும் காலில் அணிந்த வளையம் (குழம்பி).
10. மூன்று காலங்களையும் குறிக்கும் பொதுச் சொல் (குழம்பி).

பெயர் :- ..............................

நிரந்தர முகவரி :- ..............................

பாடசாலை :- ..............................

பாடசாலை முகவரி :- ..............................

வகுப்பு :- ..............................

அருகில் உள்ள நகரம் :- ..............................

மாவட்டம் :- ..............................

### போட்டி விதி முறைகள்

1. சரியான விடைகளை உரிய சதுரக் கட்டங்களில் நிரப்பிக் கீழேயுள்ள கூப்பனையும் பூர்த்தி செய்து, தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 2005.07.14ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் குறுக்கெழுத்துப் போட்டி - 30, பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி
டி.ஐ.ஷிராஸா, தரம் - 10B,
அல்-அஸ்ரக் மு.வி,
புத்தளம்.

எமது முகவரி

குறுக்கெழுத்துப் போட்டி -32
"விஜய்"
த.பெ.எண். 2037
கொழும்பு

### போட்டி. இல - 30இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கொ | த் | 2 ம | லை | ■ | 3 |
| ர | ■ | ந் | ■ | 4 பி | ணை |
| 5 வ | 6 ஸ் | தி | 7 ர | ம் | ■ |
| 8 க் | கே | ■ | 9 சி | ப் | பி |
| 10 க | வி | 11 ன் | ■ | ய | ■ |
| ல் | ■ | 12 பை | க் | கா | ஃ |

### பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

எஸ்.பிரியதர்ஷன், தரம் - 08B,
புனித பொஸ்கோ கல்லூரி,
ஹட்டன்.



எம்.ஜெகதீஸ்வரி, தரம் - 10C,
பரி.யோவான் த.ம.வி,
இறக்குவானை.

ஸிம்ரான் வஸீர், தரம் - 09B,
களு/அல்-ஹம்றா ம.வி, தர்கா நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்த்துக்கேயரின் அதிகாரப் போட்டி

அத்தியாயம் 10

வரலாற்றிலிருந்து..

**1** போர்த்துக்கேயரின் தலையீடுகள் வர வர அதிகரிக்கத் தொடங்கின. இதிலிருந்து தப்புவதற்கு முஸ்லிம்கள் ஒரு வழியைக் கண்டு பிடித்தார்கள். அதாவது கலப்பின மற்றும் வட இந்திய அரசுகளின் கூட்டிணைப்புடன் உருவாக்கப்பட்ட கடற் படையொன்றை அமைத்துப் போர்த்துக்கேயரைத் தாக்கி வந்தனர். இதன் காரணமாகப் போர்த்துக்கேயர் பின் வாங்கத் தொடங்கினர்.

**2** இது தொடர்பாக அதிக கோபமடைந்த லொரன்ஸோ டி அல்மேதா முஸ்லிம்கள் உருவாக்கிய அக்கடற்படையை முற்றாக அழிக்கத் திட்டமிட்டுத் தன் கடற்படையைப் பலப் படுத்திக் கொண்டார். இதனைத் தொடர்ந்து இந்து சமுத்திரத்தின் மத்தியில் கடுஞ்சமர் இரு படைகளுக்குமிடையில் ஏற்பட்டது.

**3** சில மணித்தியாலங்களிலேயே போர்த்துக்கேயக் கடற்படை முற்றாக நிர்மூலமாக்கப்பட்டது. இந்தக் கடுஞ்சமரில் இளம் போர்த்துக்கேயத் தளபதி லொரன்ஸோ டி அல்மேதா துரதிஷ்ட மரணத்தைத் தழுவிக் கொண்டார். பலம் பொருந்திய, வீரனின் மறைவு போர்த்துக்கேயக் கடற்படைக்குப் பேரிழப்பாக அமைந்தது. இவர் போர்த்துக்கேயப் படையின் மிகச் சிறந்த, எதற்கும் அஞ்சாத திறமைமிக்க படைத்தளபதியாக இருந்தவர்.

**4** லொரன்ஸோவின் மரணத்தின் பின் கூட்டிணைந்த படையைப் பழி வாங்க வேண்டுமென்று போர்த்துக்கேயர் நினைத்துச் செயற்பட்டனர். இதனைத் தொடர்ந்து கூட்டிணைந்த படையைத் தாக்கத் தொடங்கினர். இந்தச் சமர் 1509 ஆம் ஆண்டின் 'டியூ போர்' என அழைக்கப்படுகின்றது. இதில்



போர்த்துக்கேயப் படை வெற்றி கண்டது. இது போர்த்துக்கேயருக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாக அமைந்தது. ஆனால் அன்று கடலின் மத்தியில் நடைபெற்ற யுத்தத்தின் போது ஏற்பட்ட உயிரிழப்புக்கள் கணக்கிலடங்காதவையாக இருந்தன.

**5** இப்போரின் பின் இந்து சமுத்திரம் முழுவதையும் போர்த்துக்கேயர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். ஆனால் இந்து சமுத்திரப் பகுதி மிகப் பாரிய கடற் பகுதியாக இருந்தமையால் முழுமையாகத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது கடினமான காரியமாக இருந்தது. அது மட்டுமன்றிக் போர்த்துக்கேயப் படையணி அனைத்தையும் லிஸ்பனிலுள்ள தலைமைக் காரியாலயமே நிர்வகித்து வந்தது. லிஸ்பனிலுள்ள போர்த்துக்கேயிரின் கடற்படைத் தலைமைக் காரியாலயத்திலிருந்து பல ஆயிரக் கணக்கான மைல் தூரத்திலுள்ள படைகளை நிர்வகிப்பது கடினமான காரியமாக் காணப்பட்டது.

**6** மிகத் தூரத்தில் தலைமைக் காரியாலயம் அமைந்திருப்பது, இங்குள்ள போர்த்துக்கேயக் கடற்படையினருக்குத் தீர்மானங்களை எடுப்பது தொடர்பில் அதிக கஷ்டங்களை ஏற்படுத்தியது. இதன் காரணமாகப் போர்த்துக்கேய மன்னன் இந்து சமுத்திரப் பிரதேசத்தின் வர்த்தகம் மற்றும் கைப்பற்றிய இடங்கள் தொடர்பாக ஆராய ஒரு தூதுவனை இந்து சமுத்திரப் பிரதேசத்திற்கு அனுப்பி வைத்தார். இத்தூதுவன் அல்பெகர்க் என்று அழைக்கப்பட்டான். யாவற்றையும் ஆராய்ந்து பார்த்த இவன் அரசனிடம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தான்.

**7** இவர் சமர்ப்பித்த ஆலோசனைகளில் சில முன்பே மன்னனிடம் பலரால் கூறப்பட்டிருந்தன. இதன் பின் இந்தியாவில் தலைமையகம் ஒன்றைக் கட்ட வேண்டுமென்று முடிவு செய்தார். கி.பி 1510ல் கோவாவை முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டனர். பின்பு அங்கு கடற்படைக் கோட்டை ஒன்றைக் கட்டிக் கொண்டனர்.

**8** செங்கடல் பாரசீகக்குடா, மலாக்கா நீரிணை என்பன இந்து சமுத்திரத்திற்குச் செல்வதற்கான வழிகளாக இருந்தன. இவற்றையெல்லாம் வெற்றிகரமாகப் பாதுகாத்துக் கொள்வதானால் அங்கெல்லாம் கோட்டைகளை அமைக்க வேண்டுமென அல்பெகர்க் ஆலோசனை வழங்கினான்.

(தொடரும்.....)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு [illegible] 2005 ஜூலை மாதம் 04ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 2, on July 04. 2005